# TAMIL NADU HIGHWAY ENGINEERS NEWS

Price Rs. 10/- (Tamil & English Monthly Magazine) தனிப் பிரதி ரூ. 10/-

ஆண்டு 36 | ஜனவரி 2026 | இதழ் 1

Volume 36 | JANUARY 2026 | Issue 1


## வாழ்த்துக்கள்

சங்கத்தின் முயற்சியின் பலனாக,
2009ஆம் ஆண்டு பணியில் சேர்ந்த அனைத்து
உதவிப் பொறியாளர்களும்
உதவிக் கோட்டப் பொறியாளர்களாக பதவி உயர்வு
ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் நன்றி!


**தலைவர்**
பொறிஞர் சே.இராமநாதன், பி.இ.,

**துணைத்தலைவர்கள்**
பொறிஞர் சோ.பாண்டியன், எம்.இ. எம்.பி.எ.,
பொறிஞர் அ.கிருஷ்ணன், எம்.டெக்.,

**பொதுச் செயலாளர்**
பொறிஞர் ப.வீரமணி, எம்.இ.எம்.பி.எ.,

**பொருளாளர்**
பொறிஞர் சொ.தியாகராஜா, எம்.இ.,

**செயலாளர்கள்**
பொறிஞர் ச.ஜோதிபாசு, எம்.டெக்., எம்.பி.ஏ.,
பொறிஞர் ஜி.விஜயராகவன், எம்.டெக்.

**செயற்குழு உறுப்பினர்கள்**

1. பொறிஞர் ப.அசோக்குமார், எம்.டெக்., 2. பொறிஞர் ச.கண்ணன், எம்.இ., 3. பொறிஞர் ந.கோட்டை ராவுத்தர், எம்.டெக்.,
4. முனைவர் இரா.செந்தில்ராஜ், எம்.இ., 5. பொறிஞர் சி.நடராஜன், எம்.டெக்., 6. பொறிஞர் ஜ.பிரபு , எம்.இ.,
7. பொறிஞர் ஜெ.பிரேம் ஆனந்த், எம். டெக்., 8. பொறிஞர் ப.பூபாலன், பி.இ., 9. பொறிஞர் சி.சு.முத்துகிருஷ்ணன், எம்.இ.,
10. பொறிஞர் ரா.முத்து முருகன், பி.இ., 11. பொறிஞர் கோ.முத்து முனிகுமாரி, எம்.டெக்., எம்.பி.எ.,
12. பொறிஞர் ந.முருகானந்தம், எம்.டெக்., 13. பொறிஞர் க.மோகன்ராஜ், எம்.டெக்., 14. பொறிஞர் ர.ராஜா, எம்.இ.,
15. பொறிஞர் பா.விமல்ராஜ், எம்.டெக்., 16. பொறிஞர் தி.விவேகானந்தன், எம்.இ.,
17. பொறிஞர் நெ.ஜாஹிர் உசேன், எம்.இ., 18. பொறிஞர் க.ஸ்ரீராம், எம்.டெக்.,



**தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை பொறியாளர் சங்கம்**


35v, தாலுகா அலுவலக சாலை, சைதாப்பேட்டை, சென்னை - 600 015
தொ. பே. எண் : 044 - 2230 0190, தொ. அ. எண். 044 - 2230 0190
website : www.tnhighwaysengineers.com, e-mail : atnhe.chn15@gmail.com



மாண்புமிகு பொதுப்பணிகள்,நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்களை
சங்க நிருவாகிகள் 31.12.2025 அன்று நேரில் சந்தித்து 48 உதவிப் பொறியாளர்களுக்கு உதவிக் கோட்ட
பொறியாளராகப் பதவி உயர்வு ஆணை வழங்கியதற்கு நன்றி தெரிவித்தும் நமது சங்கத்தின்
நாட்குறிபேடு மற்றும் நாட்காட்டி வழங்கி புத்தாண்டு வாழ்த்துத் தெரிவித்தனர்



மாண்புமிகு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்
அவர்களைச் சங்க நிருவாகிகள் 31.12.2025 அன்று நேரில் சந்தித்து
பொறியாளர்களின் ஊதியம் தொடர்பான கோரிக்கை மனு அளிக்கப்பட்டது.



மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் அவர்களை சங்க நிருவாகிகள் 22.12.2025 அன்று
நேரில் சந்தித்து பொறியாளர்களின் ஊதியம் தொடர்பான கோரிக்கை மனு அளிக்கப்பட்டது.

# தலையங்கம்

**புத்தாண்டு மற்றும் தமிழர் திருநாள் வாழ்த்துக்கள்**

கடந்த ஆண்டின் சவால்கள் அனைத்தும் இன்று வளமான படிப்பினைகளாக மாறி, எதிர்காலத்திற்கான உறுதியான அடித்தளமாக அமைந்துள்ளன. இந்தப் புதிய 2026ஆம் ஆண்டில், நாம் அனைவரும் (உதவிப் பொறியாளர்கள் முதல் தலைமைப் பொறியாளர்கள் வரை) ஒரே குடும்பமாக ஒற்றுமையுடன் இணைந்து செயல்படுவோம்.

புதிய தொழில்நுட்ப முன்னேற்றங்களையும் செயல்முறை மேம்பாடுகளையும் கையகப்படுத்தி, நம் துறையை மேலும் உயர்ந்த நிலைக்கு எடுத்துச் செல்வோம். ஒவ்வொருவரின் கடமை உணர்வும் அர்ப்பணிப்பும் ஒன்றிணைந்து, கூட்டாக சிறப்பான சாதனைகளைப் பெறுவோம்.

புதிய ஆண்டில் புதிய இலக்குகளையும் கனவுகளையும் சுமந்து அடியெடுத்து வைக்கும் சங்க உறுப்பினர்கள் அனைவருக்கும் புத்தாண்டு மற்றும் தைத் திருநாள் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்வதோடு அதே போன்று சங்கமும் தனது பழைய இலக்குகளையும் புதிய கனவுகளையும் நிறைவேற்ற தயாராகி வருகிறது.

புத்தாண்டு கலந்துரையாடல் கூட்டம்

27.12.2025 அன்று தமிழ்நாடு பொதுப்பணித்துறை மூத்த பொறியாளர்கள் சங்கத்தின் ஆங்கிலப் புத்தாண்டு கலந்துரையாடல் கூட்டம் சென்னை கோயம்பேட்டில் சிறப்பாக நடைபெற்றது. இக்கூட்டத்தில் முன்னாள் தலைவர் **பொறிஞர் அ. வேங்கடாசலம்** அவர்களும், மாநில தலைவர் அவர்களும், மாநில பொதுச் செயலாளர் அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

28.12.2025 அன்று தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை பொறியாளர்கள் சங்கத்தின் ஆங்கிலப் புத்தாண்டு கலந்துரையாடல் கூட்டம் சென்னையில் சிறப்பாக நடைபெற்றது. எங்களது அழைப்பை ஏற்று இங்கு வருகை தந்த மூத்த பொறியாளர் **திரு. சந்திரசேகரன்** அவர்களுக்கும், **துணை இயக்குநர் முனைவர் ராமலிங்கம்** அவர்களுக்கும், **மூத்த பொறியாளர் திரு. இளங்கோவன்** அவர்களுக்கும், **மூத்த பொறியாளர் திரு. கருணாநிதி** அவர்களுக்கும் கடுமையான பணிச்சுமைகளுக்கிடையிலும் இக்கூட்டத்தில் பங்கேற்றுள்ள நமது சங்க நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் அனைவருக்கும் சங்கம் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது

**பதவி உயர்வு - நன்றி மற்றும் வாழ்த்துச் செய்தி**

தலைமைப் பொறியாளர் முதல் கோட்டப் பொறியாளர் வரையிலான பதவி உயர்வுகள் சிறிய காலத்தாமதத்திற்கு பிறகு கிடைத்தாலும் உதவிக் கோட்டப் பொறியாளர் பதவி மட்டும் நீண்ட நாட்கள் கடுமையான போராட்டங்களுக்கு பிறகே பதவி உயர்வு பெற முடிகிறது. சங்கத்தின் தொடர் விடா முயற்சியினால் உதவிக் கோட்டப் பொறியாளர் பதவி உயர்வு பெற்றிருப்பதை பெருமையுடனும் மகிழ்ச்சியுடனும் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்த பதவி உயர்விற்குரிய ஆணை வழங்கிய **மாண்புமிகு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்** அவர்களுக்கும், **துறைச் செயலாளர்** அவர்களுக்கும், மேலும் நமது கோரிக்கைகளை அமைச்சரிடம் எடுத்துச் செல்ல பாலமாக செயல்பட்டு முக்கிய பங்காற்றிய **தொழில்நுட்ப சிறப்பு அலுவலர் பொறிஞர் ஆர்.சந்திரசேகர்** அவர்களுக்கும் எங்களது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். மேலும், பல தடைகள் ஏற்பட்டாலும் அவற்றை கடந்து பதவி உயர்வு ஆணையை பெற்றுத் தந்த **முதன்மை இயக்குநர் பொறிஞர் ஆர்.செல்வதுரை**

அவர்களுக்கும் **இணை இயக்குநர் (நிர்வாகம்) பொறிஞர் பி.சாந்தி** அவர்களுக்கும் சங்கத்தின் சார்பாக மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**உதவிக்கோட்டப் பொறியாளராகப் பதவி உயர்வு பெற்ற மாநிலச் சங்க நிருவாகிகள்**

**பொருளாளர்- பொறிஞர் சொ.தியாகராஜா,**
**துணைத் தலைவர் - பொறிஞர் அ.கிருஷ்ணன்,**
**செயற்குழு உறுப்பினர் - பொறிஞர் நெ.ஜாஹிர் உசேன்,**
**செயற்குழு உறுப்பினர் - பொறிஞர் ஜி.முத்து முனி குமாரி,**

மேற்கண்ட அனைவருக்கும் சங்கத்தின் சார்பாக மனப்பூர்வமான பாராட்டுகளையும் தெரிவித்துக் கொண்டு, அவர்களின் பணிச்சேவை மேலும் சிறக்க வாழ்த்துகிறோம்.

**பதவி உயர்வில் மந்தன அறிக்கை பெறுவதில் ஏற்படும் சிரமங்கள்**

இந்த பதவி உயர்வுகளை பெறுவதற்கு உதவிப் பொறியாளர் எவ்வளவு சிரமம் அடைந்தார்களோ அதற்கு சற்றும் குறையாத அளவில் பதவி உயர்வுக்கான பொறியாளர்களின் மந்தன அறிக்கையை (Confidential report) பெறுவதற்கு சிரமம் அடைந்தனர். மந்தன அறிக்கையை பொறுத்த அளவில் அந்தந்த கோட்டப் பொறியாளர்கள், கண்காணிப்புப் பொறியாளர்களிடம் ஒவ்வொரு வருடமும் ஒப்புதல் பெற்று முதன்மை இயக்குநர் அலுவலகத்திற்கு அனுப்புவது அந்தந்த அலுவலகத்தில் உள்ள கண்காணிப்பாளர்களின் பொறுப்பு. அது தொடர்பாக தலைமைப் பொறியாளர் (பொது) அலுவலகமாக இருந்தபொழுது சுற்றறிக்கைகள் வழங்கி இருந்தாலும் அவை பின்பற்றப்படாமல் உள்ளது. அதனை முறையாக பின்பற்ற மீண்டும் சுற்றறிக்கை அனுப்ப வேண்டுமென முதன்மை இயக்குநர் அவர்களை சங்கம் கேட்டுக் கொள்கிறது.

**சங்க நாட்குறிப்பேடு மற்றும் நாட்காட்டி**

2026ஆம் ஆண்டிற்கான நமது சங்கத்தின் நாட்குறிப்பேடும், நாட்காட்டியும் புதுப்பொலிவுடன் சிறப்பாக தயாரித்து வழங்கிய திருவாளர் HEXA IDEA PRINT SOLUTION பதிப்பகத்தின் உரிமையாளர் **திரு.மோகன்ராஜ்** அவர்களுக்கும், மேலும் இந்த நாட்குறிப்பேடு மற்றும் நாட்காட்டியிலுள்ள அனைத்து தொழில்நுட்ப விவரங்களையும் பலமுறை கவனமாக சரிபார்த்து, அவை சிறப்பாக வெளிவருவதற்கு பேருதவியாக விளங்கிய **திரு.எம்.ஜி. மணவாளன், ஆட்சி அலுவலர் (பணி நிறைவு), பொறிஞர் அ.வேங்கடாசலம், இணை இயக்குநர், பயிற்சி மையம், சென்னை முனைவர் எஸ்.இராமலிங்கம், துணை இயக்குநர், பயிற்சி மையம், சென்னை, முனைவர் பி. யுகானந்த், துணைத் தலைமைப் பொறியாளர், தேசிய நெடுஞ்சாலை, சென்னை பொறிஞர் கே.பாலாஜி உதவிக்கோட்டப் பொறியாளர், பாலங்கள் சிறப்பு ஆய்வு அலகு திருச்சி** மற்றும் **பொறிஞர் எம். ஆனந்த்ராஜ், உதவிப் பொறியாளர், நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம், சென்னை** ஆகியோர்களுக்கும் மேலும் 2026ஆம் ஆண்டிற்கான நாட்குறிப்பேடு மற்றும் நாட்காட்டிகளை முறையாக தயார் செய்து, மாவட்டக் கிளைகளுக்கு அனுப்பி வைத்த சங்க அலுவலகப் பணியாளர்களான **திரு.சே.சத்தியசீலன், திரு.சி.யுவராஜ், திரு.ப.கார்த்திக், திரு.சு.நவீன்குமார், திரு.ஜெ.சந்தானம், திருமதி.ச.மகாலட்சுமி, திருமதி.ப.கோமதி** ஆகிய அனைவருக்கும் எங்களது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

சென்ற ஆண்டைப் போல இல்லாமல், இந்த ஆண்டு சங்கத்தின் நாட்குறிப்பேடு மற்றும் நாட்காட்டிகள் புத்தாண்டுக்கு முன்பாகவே உறுப்பினர்களைச் சென்றடையும் வகையில் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. அவற்றை நீங்கள் மகிழ்ச்சியுடன் பயன்படுத்திக் கொண்டிருப்பீர்கள் என்று நம்புகிறோம்.

**ஊதிய ஆலோசனை மற்றும் நடவடிக்கைகள்**

தமிழ்நாடு பொறியாளர்கள் கூட்டமைப்பின் சார்பாக 21.12.2025 அன்று அவசரமாக வீடியோ காணொளி வாயிலாக கூட்டம் நடைபெற்றது. அதில் 22.12.2025 அன்று சென்னை தலைமைச் செயலகம், நாமக்கல் கவிஞர் மாளிகையில் நடைபெறவுள்ள **மாண்புமிகு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு** அவர்களும், **மாண்புமிகு நிதித்துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு** அவர்களும், **மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி** அவர்களும் கலந்து கொள்ளும் ஆலோசனைக் கூட்டத்தில் பங்கேற்று, நமது ஊதியக் குறைப்பு கோரிக்கையை மனுக்களாக தெரிவிப்பது என முடிவு செய்யப்பட்டது.

அதன்படி, தலைவர் **பொறிஞர் சே. இராமநாதன்** மற்றும் பொதுச் செயலாளர் **பொறிஞர் ப.வீரமணி** ஆகியோர் இணைந்து மனு அளித்து, நமது குறைகளை விரிவாக எடுத்துரைத்தனர். அவற்றை பரிசீலிப்பதாக மாண்புமிகு அமைச்சர்கள் உறுதி அளித்தனர்.

மேலும், குழுவில் நமது துறையை சார்ந்த **மாண்புமிகு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்** இடம் பெற்றுள்ளதை கருத்தில் கொண்டு, ஊதியம் தொடர்பாக மிகவும் தெளிவாகவும் ஆழமாகவும் மற்றொரு விரிவான மனுவை தயாரித்து, அவர்களிடம் விளக்கி சமர்ப்பித்தோம். இதனை மாண்புமிகு நிதித்துறை அமைச்சர் அவர்களிடம் எடுத்துரைப்பதாகவும் உறுதி அளித்தார்.

இந்த மனுவை தயாரிப்பதில் பெரிதும் உதவி செய்த இணை இயக்குநர் **பொறிஞர் அ.வேங்கடாசலம்** அவர்களுக்கும், ஆட்சி அலுவலர் **திரு. எம்.ஜி.மணவாளன்** (பணி நிறைவு) அவர்களுக்கும் எங்களது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இது தொடர்பான அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து தமிழ்நாடு பொறியாளர்கள் கூட்டமைப்புடன் ஆலோசனைகள் நடைபெற்று வருகின்றன. எனவே, இந்த ஊதியக் குறைப்பால் பாதிக்கப்பட்ட அனைத்து பொறியாளர்களும் சங்கத்துடன் இணைந்து ஒற்றுமையாக செயல்பட வேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

**கலந்தாய்வுக் கூட்டங்களில் பொறியாளர்கள் அடையும் இன்னல்கள்**

குறிப்பிட்ட ஒரு அலகில் மட்டும் விடுமுறை தினங்களிலும், இரவு நேரங்களிலும், சில நாட்கள் நள்ளிரவைக் கடந்தும் பணி முன்னேற்ற கலந்தாய்வு கூட்டங்கள் என்ற பெயரில் காணொளி வாயிலாகவும் நடத்தப்படுவதாக சங்கத்திற்கு தெரிய வருகிறது. மேலும், அத்தகைய ஆய்வுக் கூட்டங்களில் மூத்த பொறியாளர்கள் முதல் உதவிப் பொறியாளர்கள் வரை மரியாதைக் குறைவாக மிகவும் மோசமாக நடத்தப்படுவதாக அறிகிறோம். இதனால் சங்க உறுப்பினர்களாக உள்ள பொறியாளர்கள் தனது குடும்பத்தை கவனிக்க நேரம் இல்லாமலும் தங்களுக்கென நேரம் ஒதுக்கி அறிவினை மேம்படுத்தவும் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும் நேரமின்றி பொறியாளர்களின் வழக்கமான அலுவலக பணிகளைக்கூட பார்க்க முடியாத அளவில் கலந்தாய்வு கூட்டங்கள் பற்றி மட்டுமே சிந்தித்து கொண்டே இருக்க வேண்டிய நிலையில் தற்பொழுது உள்ளனர். இந்த கூட்டங்களில் பணிகளை பற்றி மட்டும் பேசாமல் பணிகளுக்கு தொடர்பு இல்லாத உரையாடல்கள் நடைபெறுவதாகவும் தெரிகிறது. மேலும், ஆய்வுக் கூட்டங்களில் அவையில் பயன்படுத்த முடியாத **(Unparlimentary words)** வார்த்தைகளில் பொறியாளர்கள் அவமானப்படுத்தப்படுவதாக அறிகிறோம். களப்பணியில் பணிபுரியும் சங்க உறுப்பினர்கள் அனைவரும் மிகுந்த மன உளைச்சலில்

பணிபுரிவதாகப் பல்வேறு பொறியாளர்கள் அலைபேசியில் அழைத்து தெரிவித்த வண்ணம் உள்ளனர். **சங்கம் இத்தகைய செயல்களை தொடர்ந்து வேடிக்கை பார்த்து கொண்டு இருக்காது என்பதையும் சங்கம் தனது உறுப்பினர்களுக்காக உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டிய சூழலை உருவாக்காமல் இருப்பது அனைவருக்கும் நன்மை பயக்கும் என்பதைச் சங்கம் தெரிவித்துக் கொள்கிறது.**

**களப்பணியில் பொறியாளர்களுக்கு ஏற்படும் சிக்கல்கள்**

களப்பணியில் பணிபுரியும் பொறியாளர்கள் பணிகளில் அடைய முடியாத இலக்கு நிர்ணயிக்கப்பட்டு பணிபுரிவதனால் தரமான பணிகள் மேற்கொள்ள முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. வாய்மொழி உத்தரவுகளை பொறுத்தவரையில் உயரதிகாரிகளால் வழங்கப்பட்ட வாய்மொழி உத்தரவுக்கான அலுவலக கோப்புகளை உடனடியாக தயார் செய்து எழுத்துப் பூர்வமான உத்தரவு பெற்ற பிறகே பணியினை தொடர வேண்டுமென அரசு விதிகளில் தெளிவாக உள்ளது. அவ்வாறு செயல்படுத்தப்படாமல் இருப்பின் அதன் விளைவுகளை பணியினை செயல்படுத்தும் பொறியாளரே ஏற்க வேண்டிய நிலை ஏற்படும். எனவே, பொறியாளர்கள் மிகவும் கவனமாக விதிகளை பின்பற்றி செயல்பட வேண்டுமென சங்கம் கேட்டுக் கொள்கிறது.

**நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய உணவகத்தின் செயல்பாடு**

நெடுஞ்சாலைத்துறை ஆராய்ச்சி நிலைய வளாகத்தில், நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்திற்கு சொந்தமான உணவகம் மிகவும் அதிகளவில் பொருட்செலவு செய்து புனரமைக்கப்பட்டு அனைத்து பொறியாளர்கள், அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் ஆகியோரின் பயன்பாட்டிற்காக திறக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இதற்கு முன்பு நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தில் கட்டடப் பராமரிப்பிற்கு குறைந்த அளவே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. தற்பொழுது கட்டடப் பராமரிப்பிற்கு நிதியினை அதிகளவில் ஒதுக்கி உணவகத்தை புனரமைத்து ஒப்பந்த அடிப்படையில் செயல்படுத்திய இயக்குநர் நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் அவர்களுக்கு பாராட்டுக்களையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறோம். அதே போன்று அந்த உணவகத்தின் அருகில் நகலகம் மற்றும் எழுதுபொருளகம் பொறியாளர்களின் நன்மையை கருத்திற்கொண்டு அமைக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென இயக்குநர் நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் அவர்களை சங்கம் கேட்டுக் கொள்கிறது.

**தலைமைப் பொறியாளரின் அறிவுரை**

நமது சங்கத்தின் சார்பாக அனைத்து தலைமைப் பொறியாளர்களையும் சந்தித்து புத்தாண்டு வாழ்த்துகளை தெரிவித்துக் கொண்டு சங்கத்தின் நாட்காட்டி மற்றும் நாட்குறிப்பேடு ஆகியவற்றை வழங்கினோம். அப்பொழுது தலைமைப் பொறியாளர் கட்டுமானம் மற்றும் பாரமரிப்பு அவர்கள் நீண்ட நேரம் உரையாடி மிக முக்கியமான ஒரு கருத்தை நமது நிருவாகிகளுக்கு வழங்கினார். "நல்லவர்களுடன் தொடர்பு வைத்துக் கொள்ள வேண்டும் நல்லவற்றை எண்ண வேண்டும் நல்ல செயல்களை மட்டுமே செய்ய வேண்டும்" என்ற உயரிய கருத்தை நமது சங்க நிருவாகிகளுக்கு தெரிவித்துக் கொண்டு புத்தாண்டு வாழ்த்துகளை தெரிவித்துக் கொண்டார். மேலும் அவரின் முயற்சியில் க(ம)ப அலகில் உள்ள உறுப்பினர்கள் மாதாந்திர சந்தா வருகின்றார்கள். அதே போன்று மற்ற அலகில் உள்ளவர்கள் சந்தா செலுத்த வேண்டுமென வலியுறுத்துமாறு கேட்டுக் கொண்டார். அவர் கூறிய கருத்தை இந்த புதிய ஆண்டில் பின்பற்றுவோம் என சங்க உறுப்பினர்கள் அனைவரும் மற்றும் சங்க நிருவாகிகளும் உறுதி ஏற்போம்.

**நெடுஞ்சாலைத்துறை பொறியாளர் சங்கம் வாழ்க!** **பொறியாளர் ஒற்றுமை ஓங்குக!!**

**நகல்:**

# தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை பொறியாளர் சங்கம்

'நெடுஞ்சாலைப் பொறியாளர் இல்லம்', 35வி, தாலுகா அலுவலக சாலை, சைதாப்பேட்டை, சென்னை - 600 015
தொலைபேசி எண் : 044 - 2230 0190 / 4312 3792
மின்னஞ்சல் : atnhe.chn@gmail.com / atnhe.chn15@gmail.com
வலைதளம் : www.tnhighwaysengineers.com

| தலைவர் | பொதுச் செயலாளர் | பொருளாளர் |
|---|---|---|
| பொறிஞர் சே.இராமநாதன், பி.இ., கைபேசி எண்: 88708 88918 | பொறிஞர் ப.வீரமணி, எம்.இ., எம்.பி.ஏ., கைபேசி எண்: 97517 04393 | பொறிஞர் சொ.தியாகராஜா, எம்.இ., கைபேசி எண்: 98436 40475 |


கடித எண்.421/2025 நாள்: 26.12.2025

பெறுநர்

முதன்மை இயக்குநர்,
நெடுஞ்சாலைத்துறை,
கிண்டி,
சென்னை - 600 025

ஐயா,

பொருள் : பணியமைப்பு - நெடுஞ்சாலைத்துறையில் பணிபுரியும் பொறியாளர்களுக்கு முதுநிலை படிப்பு முடித்தமைக்கான ஊதிய உயர்வு கோருதல் - தொடர்பாக

பார்வை :
1. அரசாணை (எம்.எஸ்) எண்.37, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் (எப்.ஆர்.IV) துறை, நாள்: 10.03.2020
2. அரசாணை (எம்.எஸ்) எண்.116, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் (எப்.ஆர்.IV) துறை, நாள்: 15.10.2020
3. முதன்மை இயக்குநர் கடித எண்.9205/நிர் 3(1) / 2020, நாள்: 07.11.2020

பார்வை (1)ல் காணும் அரசாணையில் முதுநிலைப் பட்டம் பெற்றமைக்காக வழங்கப்படும் ஊதிய உயர்வுகள் 10.03.2020 முதல் இரத்து செய்து உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து, பார்வை - 2ல் காணும் அரசாணையில் மேற்காணும் நேர்வு தொடர்பாக தெளிவுரை வழங்கப்பட்டுள்ளது.

இந்த அரசாணையின்படி நமது துறையில் பணிபுரியும் பொறியாளர்கள் பட்ட மேற்படிப்பு தேர்ச்சி பெற்றமைக்கு ஊக்க ஊதிய உயர்வு வழங்க 31.03.2021க்குள் நிதித்துறையின் அனுமதி பெற்றிருக்க வேண்டும். ஆனால், நெடுஞ்சாலைத்துறையில் பணிபுரியும் உதவிப் பொறியாளர்கள், உதவிக் கோட்டப் பொறியாளர்கள், கோட்டப் பொறியாளர்கள் ஆகியோருக்கு இதுநாள் வரை ஊக்க ஊதிய உயர்வு வழங்கப்படவில்லை என்பதை வருத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

சங்க உறுப்பினர்களின் வேண்டுகோளுக்கு இணங்க அவர்களிடமிருந்து பெறப்பட்ட மனுக்களை தங்கள் கனிவான பார்வைக்கு சமர்பிக்கிறேன். அதனை சிறப்பு நேர்வாகக் கருதி இம்மனுக்களை நிதித்துறைக்கு அனுப்பி ஊக்க ஊதிய உயர்வு பெறுவதற்கான உரிய ஆணையினை பெற நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி,

இணைப்பு: 1. பெயர்ப் பட்டியல் விவரம்

2. மனுக்களின் எண்ணிக்கை

தங்கள் உண்மையுள்ள,

பொதுச் செயலாளர்

26 DEC 2025

சென்னை-25

# PG INCREMENT RECEIVED LETTERS LIST

| S.No | NAME | DESIGNATION |
|---|---|---|
| 1. | ER.S.MALARVIZHI | DE, TNRDC, CHENNAI |
| 2. | ER.K.RAJESH | AE,QC, ARANTHANGI |
| 3. | ER.S.PRASHANTH | AE, QC, COIMBATORE |
| 4. | ER.J.JEMI SHALINI | AE, HRS, CHENNAI |
| 5. | ER.V.BENCY | AE, HRS, CHENNAI |
| 6. | ER.P.ANITHA | AE, HRS, CHENNAI |
| 7. | ER.K.R.VENKATESAN | AE, N&RR, TIRUVANNAMALAI |
| 8. | ER.T.INDIRAGANDHI | ADE, DESIGN, CHENNAI |
| 9. | ER.G.SATHISH PANDIYAN | AE, TNRSP, TIRUNELVELI |
| 10. | ER.M.PREMA RANI | ADE,QC, DHARMAPURI |
| 11. | ER.S.SURESHKUMAR | ADE, QC, EDAPPADI |
| 12. | ER.T.VIVEKANANDAN | ADE, C&M, ORATHANADU |
| 13. | ER.A.KAVIHA | ADE, CKICP, CUDDALORE |
| 14. | ER.N.ANNADURAI | ADE, QC, NAGAPPATTINAM |
| 15. | ER.M.S.MOHAMMEDSHAGUL HAMEEDRAJA | AE, NH (QC), MADURAI |
| 16. | ER.A.HIDHAYATHULLAH | AE, CHENNAI |
| 17. | ER.J.PRABHU | AE, QC, TRICHY |
| 18. | ER.K.RAJASEKARAN | ADE, BMU, COIMBATORE |
| 19. | ER.K.SARANYA | AE, NH, SALEM |
| 20. | ER.SP.MADHURI | AE, C&M, VADA MADURAI |
| 21. | ER.V.V.NITHILAN | DE, DSE, C&M, COIMBATORE |
| 22. | ER.S.RAMALINGAM | DD-I, TRAINING CENTRE, CHENNAI |
| 23. | ER. K.R.BHOOPATHI | AE, N&RR, MUSIRI |
| 24. | ER.A.MOHAMED ABDHAHIR | AE, QC, TRICHY |
| 25. | ER.F.ALFIN ASHMITA | AE, QC, TIRUNELVELI |
| 26. | ER.A.DEEPAN CHAKRAVARTHI | AE, N&RR, SIVAGANGAI |

| | | |
|---|---|---|
| 27. | ER.S.KARTHICK | AE, BMU, TRICHY |
| 28. | ER.N.MURUGANANDAM | AE, C&M, NAGAPPATINAM |
| 29. | ER.T.BHARATHIDHASAN | AE, QC, NAGAPPATINAM |
| 30. | ER.S.SIVACHANDRAN | AE, C&M, NAGAPPATINAM |
| 31. | ER.S.JAGANNATHAN | ADE, NH, MADURAI |
| 32. | ER.A.YAZHINI | AE, NH, AUNDIPATTI |
| 33. | ER.PA.NANDHINI | AE, RS, SALEM |
| 34. | ER.R.SUGANDHAN | AE, NH, DHARMAPURI |
| 35. | ER.B.GAYATHRI | AE, N&RR, SALEM |
| 36. | ER.M.DIVYA | AE, N&RR, TIRUTANI |
| 37. | ER.U.SUBA | AE, PROJECT, TIRUNELVELI |
| 38. | ER.S.GEETHAPRIYA | AE, C&M, PATTUKKOTTAI |
| 39. | ER.M.BALAJI | AE, C&M, USILAMPATTI |
| 40. | ER.J.MANIMOZHI | ADE, CKICP, PERAMBALUR |
| 41. | ER.N.KOTTAI RAWTHER | AE, C&M, TIRUMAYAM |
| 42. | ER.J.ASHOKKUMAR | AE, PROJECT, VELLORE |
| 43. | ER.R.IMAYARAJA | AE, N&RR, THANJAVUR |
| 44. | ER.A.KUMANAN | DE, C&M, THENI |
| 45. | ER.C.SUGANTHI | AE, DESIGN, CHENNAI |
| 46. | ER.G.NANTHINI | AE, DESIGN, CHENNAI |
| 47. | ER.S.PRIYARANJINI | AE, QC, CHENNAI |
| 48. | ER.B.DILIP KUMAR | AE, C&M, |
| 49. | ER.N.SUHIRTHA | AE, N&RR, ARANTHANGI |
| 50. | ER.M.MONISHA | AE, N&RR, KARUR |
| 51. | ER.K.RUTHRA | AE, CKICP, VANDHAVASI |
| 52. | ER.K.ARAVINDHAN | AE, C&M, TIRUVANNAMALAI |
| 53. | ER.M.SARAVANAN | AE, NH, PATTUKKOTTAI |
| 54. | ER.G.VIJAYARAGHAVAN | AE, N&RR, SIRKALI |

**<u>நகல்:</u>**


# தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை பொறியாளர் சங்கம்

'நெடுஞ்சாலைப் பொறியாளர் இல்லம்', 35வி, தாலுகா அலுவலக சாலை, சைதாப்பேட்டை, சென்னை - 600 015
தொலைபேசி எண் : 044 - 2230 0190 / 4312 3792
மின்னஞ்சல் : atnhe.chn@gmail.com / atnhe.chn15@gmail.com
வலைதளம் : www.tnhighwaysengineers.com

| தலைவர் | பொதுச் செயலாளர் | பொருளாளர் |
|---|---|---|
| பொறிஞர் சே.இராமநாதன், பி.இ., | பொறிஞர் ப.வீரமணி, எம்.இ., எம்.பி.ஏ., | பொறிஞர் சொ.தியாகராஜா, எம்.இ., |
| கைபேசி எண்: 88708 88918 | கைபேசி எண்: 97517 04393 | கைபேசி எண்: 98436 40475 |


கடித எண்.419/2025 நாள்: 22.12.2025

பெறுநர்

மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள்,
தலைமைச் செயலகம்,
சென்னை- 600 009

மதிப்பிற்குரிய ஐயா,

பொருள் : பட்டதாரிப் பொறியாளர்கள் ஊதியம் - முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் வழங்கிய ஊதியம் கடந்த ஆட்சியில் குறைக்கப்பட்டது - மீண்டும் உயர்த்தி ஆணை வழங்கிட முறையிடுதல் - தொடர்பாக

பார்வை :
1. அரசாணை எண்: 283, நிதித்துறை, நாள்: 26.08.2010
2. அரசாணை எண்: 71, நிதித்துறை, நாள்: 26.02.2011

வணக்கம்!

எழுபது இலட்சம் கோடிப் (7 டிரில்லியன் டாலர்) பொருளாதாரமாக வளர்த்துத் தமிழகத்தினை இந்தியாவில் முதன்மை மாநிலமாக உயர்த்திடத் திட்டங்கள் தீட்டி அல்லும் பகலும் அயராமல் உழைக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் போற்றி வணங்குகிறோம்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தமது ஆட்சி நிருவாகப் பங்களிப்புகளைப் பொதுப்பணித்துறைக்கு பொறுப்பேற்றுத் தொடங்கியதால், பொறியாளர்கள் ஊதியம் உள்ளிட்ட எல்லாக் கோரிக்கைகளையும் பரிவுடன் நிறைவேற்றி எங்கள் இதயங்களில் என்றும் வீற்றிருக்கிறார். பொறியாளர் ஊதியம் கீழிறக்கப்பட்ட போது முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் உயர்த்தி வழங்கப்பட்ட நிகழ்வுகளை நன்றியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

- 1971ஆம் ஆண்டு உதவிப் பொறியாளர்களுக்கு ஊதியம் ரூ.400/- என்று இரண்டாவது ஊதியக்குழு பரிந்துரைத்த போதும், எங்கள் கோரிக்கையினை ஏற்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஒரு நபர் குழுவினை நியமித்துப் பரிந்துரைகளைப் பெற்று 1972ஆம் ஆண்டு ரூ.425/- என உயர்த்தி வழங்கியதை இன்றும் நன்றியுடன் நினைவிற் கொண்டுள்ளோம்.

- 1989ஆம் ஆண்டு உதவிப் பொறியாளர்களுக்கு ஊதியம் ரூ.1640/- என்று நான்காவது ஊதியக்குழு பரிந்துரைத்தாலும் எங்களுக்கு இணையாகக் கல்வித் தகுதி பெற்றவர்கள் அதிகம் ஊதியம் பெறுகிறார்கள் என்று எங்கள் குறையினை முறையிட்டவுடன் ரூ.2000/- என்று 1990ஆம் ஆண்டு உயர்த்தி வழங்கியவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

- 2010ஆம் ஆண்டு 6ஆவது ஊதியக்குழு பொறியாளர்களுக்குக் குறைவான ஊதியத்தினை நியாயமின்றிப் பரிந்துரைத்தபோது முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஊதியத்தினை உயர்த்தி நீதி வழங்கியதையும் பின்னர் அமைந்த அரசு 2013ல் முற்றாகக் குறைத்ததையும் பொறியாளர்கள் குறைவான ஊதியத்தையே இன்றளவும் பெற்று வருவதையும் ஆட்சி நிருவாகப் பங்களிப்பினைப் பொறியாளர்கள் பெருமளவில் பணியாற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சராகப் பொறுப்பேற்றுத் தொடங்கிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கவனத்திற்குப் பணிவுடன் தெரிவிக்க விரும்புகிறோம்.

- 2009ஆம் ஆண்டு 6-ஆவது ஊதியக் குழு அமலாக்கத்தின் போது அமைக்கப்பட்ட அலுவல் குழு மிகக் குறைவான ஊதியத்தை, ரூ.9300 - 34800 + தரஊதியம் 4700 (PB2) என்ற அளவில் பரிந்துரை செய்தது.

- அப்பரிந்துரைகள் நியாயமற்ற ஒப்பீடுகளால் வழங்கப்பட்டதெனப் பொறியாளர் சங்கங்கள் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களிடம் தெரிவித்து நியாயம் வழங்கிட வேண்டினோம்.

- மருத்துவர்களுக்கும் தொகுதி-1 அலுவலர்களுக்கும் இணையான ஊதியத்தைப் பட்டதாரிப் பொறியாளர்களுக்கும் வழங்க வேண்டும் என்று சுமார் 10000 பட்டதாரிப் பொறியாளர்கள் நீண்ட காலமாகக் கோரிக்கை வைத்து வந்துள்ளோம்.

- பொறியாளர்கள் கோரிக்கையின் அடிப்படையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் திரு.ராஜீவ் ரஞ்சன் இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் ஒரு நபர் குழு அமைத்து ஆணையிட்டார்கள்.

- **2010ல் ஒரு நபர் குழு வழங்கிய பரிந்துரைகளின் அடிப்படையில் மற்ற தொழில் நுட்பவியலாளர்களுக்கு இணையாக ரூ.15600-39100 என்ற ஊதியக் கட்டில் (PB3) ஊதியம் பொறியாளர்களுக்கு வழங்கப்பட்டது. பல்லாயிரக்கணக்கான பொறியாளர்களும் அவர்களது குடும்பத்தினரும் மாண்புமிகு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டாடினர்.**

- ஆனால், பின்னர் அமைந்த அரசு பொறியாளர்களின் கல்வித் தகுதியையும் பணிப் பொறுப்புகளையும் கணக்கிற் கொள்ளாமல், பெரிய அளவில் ஊதியத்தைக் குறைத்துப் பொறியாளர்களுக்குச் சராசரியாக 20 ஆயிரம் ரூபாய்க்கு மேல் இழப்பு ஏற்படும் வகையில் 2013ல் ஆணைகள் வெளியிட்டது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் வழங்கிய ஊதியம் பின்னர் பறிக்கபட்டது பற்றிச் சுருக்கமாக அட்டவணையில் தருகிறோம்.

| வ. எண் | பதவியின் பெயர் | மாண்புமிகு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் வழங்கிய ஊதியம் (2010) | குறைதீர் குழு 2013 பரிந்துரைகளின் அடிப்படையில் வெளியிடப்பட்ட அரசாணை எண் 242 மற்றும் மாண்புமிகு உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின் அடிப்படையில் அமையப்பெற்ற குறைதீர் குழு 2019 பரிந்துரைகளின்படி வெளியிடப்பட்ட அரசாணை எண் 404ல் வழங்கப்பட்ட ஊதியம் (2020) |
|---|---|---|---|
| 1 | உதவிப்பொறியாளர் | ரூ.15600-39100 (ஊதியக் கட்டு 3) தர ஊதியம் 5400 | ரூ.9300 - 34800 (ஊதியக் கட்டு 2) தர ஊதியம் 5100 |
| 2 | உதவிக்கோட்டப் பொறியாளர்/ உதவி செயற்பொறியாளர் | ரூ.15600-39100 (ஊதியக் கட்டு 3) தர ஊதியம் 6600 | ரூ.15600-39100 (ஊதியக் கட்டு 3) தர ஊதியம் 5400 |
| 3 | கோட்டப்பொறியாளர்/ செயற்பொறியாளர் | ரூ.15600-39100 (ஊதியக் கட்டு 3) தர ஊதியம் 7600 | ரூ.15600-39100 (ஊதியக் கட்டு 3) தர ஊதியம் 6600 |

- பல ஆண்டு காலமாகத் தொடர்ந்து மாண்புமிகு உயர் நீதிமன்றமும் உச்ச நீதிமன்றமும் வழங்கிய ஆணைகள் 2013-ல் அப்போதைய அரசு அறிவித்த ஊதியக் குறைப்பிலிருந்து பொறியாளர்களைப் பாதுகாத்து வந்தன.

- பின்னர் மாண்புமிகு உச்ச நீதிமன்றத் தீர்ப்பின்படி அமைக்கப்பட்ட குறைதீர் குழுவும் இந்த ஊதியக் குறைப்பை நிவர்த்தி செய்யவில்லை. காலங்காலமாக கால்நடை மருத்துவர்களுக்கு இணையான ஊதியத்தைப் பெற்றுவந்த பொறியாளர்களின் ஊதியம் அவர்களைக் காட்டிலும் 2020ஆம் ஆண்டு குறைக்கப்பட்டது சமூகத்தில் பொறியாளர்களின் மதிப்பினைப் பெருமளவில் குறைப்பதாக அமைந்தது.

- பொறியாளர்களின் ஊதியத்தினைக் குறைத்து 12.11.2020 வெளியிடப்பட்ட அரசாணை எண் 404ஐ ரத்துச் செய்யக் கோரி நெடுஞ்சாலைத்துறை பொறியாளர் சங்கமும் பாதிக்கப்பட்ட பிற சங்கங்களும் தொடர்ந்த வழக்குகளில் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் ஊதியத்தினை குறைக்காமல் வழங்க வேண்டும் என்று இடைக்கால ஆணை வழங்கியது.

- இந்த இடைக்கால ஆணையினை மூத்த வழக்கறிஞர் திரு.வில்சன் அவர்கள் நெடுஞ்சாலைத்துறை பொறியாளர் சங்கத்தின் சார்பில் திறமையாக வாதாடிப் பெற்றுத் தந்தார்.

- 10 ஆண்டு காலமாகத் தொடர்ந்து கோரியும் பொறியாளர்களுக்கு நியாயமான ஊதியத்தினைத் தர மறுத்துவிட்டது முந்தைய அரசு.

- தமிழ்நாட்டில் உள்ள மற்ற அரசு அலுவலர்கள் ஏழாவது ஊதியக்குழு வழங்கிய ஊதியத்தினைப் பெற்று வரும் சூழலில் சுமார் 10 ஆண்டுகள் கடந்தும் பொறியாளர்கள் தங்களுக்குக் கீழ் பணிபுரியும் பணியாளர்களைக் காட்டிலும் குறைவான ஊதியத்தினை, அதாவது ஆறாவது ஊதியக்குழு ஊதியத்தினையே பொறியாளர்கள் இன்றளவும் பெற்று வருவது வேதனைக்குரியது.

- பொறியாளர்களின் ஊதியக் குறைப்பிற்கு எதிராக மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர் திரு.துரைமுருகன் அவர்களும் அரசியல் கட்சித் தலைவர்களும் கண்டனம் தெரிவித்து மாண்புமிகு கலைஞர் அவர்கள் வழங்கிய ஊதியத்தை குறைக்காமல் மீண்டும் பொறியாளர்களுக்கு வழங்க அப்போதைய அரசை வலியுறுத்திய போதும் முந்தைய அரசு செவி சாய்க்கவில்லை. (கண்டன அறிக்கைகளின் நகல்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன).

- திருவள்ளுர் சிலைக்கு கன்னியாகுமரியில் கண்ணாடியினால் அமைக்கப்பட்ட நடைப்பாலம், தமிழ்நாடு வளர்ச்சிக்காக தமிழக அரசு மிகவும் சிறப்பு வாய்ந்த திட்டங்களின் ஒன்றான அவிநாசி சாலையில் (ஜீ.டி.நாயுடு மேம்பாலம்) மற்றும் மேலமடை சந்திப்பில் (வேலு நாச்சியார் மேம்பாலம்) பறக்கும் சாலை மேம்பாலங்கள் கட்டப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார். அதில் சிறப்பாக பணியாற்றிய நெடுஞ்சாலைத்துறை பொறியாளர்கள் அனைவரும் தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறைக்கும் மற்றும் தமிழ்நாடு அரசுக்கும் பொறியாளர்கள் சிறப்பு சேர்த்துள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

- தமிழ்நாடு பொறியாளர் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் அவர்கள் மாண்புமிகு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்களை 14.10.2025 அன்று நேரில் சந்தித்து பொறியாளர்களின் ஊதியம் தொடர்பான கோரிக்கையை விரைவில் அமல்படுத்தி ஆணை வழங்கிடுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது.

- தமிழ்நாடு அரசு பணியாளர்கள் தேர்வாணையம் (TNPSC) மூலம் உதவிப் பொறியாளர் முன்பு எழுத்து மற்றும் நேர்முக தேர்வு மூலமாக பணி நியமனம் செய்யப்பட்டது. ஆனால், தற்பொழுது ஊதியம் குறைப்பின் காரணமாக அலுவலக பணியாளர்களை தேர்வு செய்வதுபோன்று நேர்முக தேர்வு இல்லாமல் எழுத்து தேர்வு மூலம் மட்டுமே தேர்வு செய்யபடுவதால் தரமான பொறியாளர்களை உருவாக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. முன்பு சிறப்பான தனித்துவமிக்க கல்லூரிகளில் பயின்று சிறப்புவாய்ந்த

- இதனை கருத்தில் கொண்டு உதவிப் பொறியாளர்கள் உள்ளிட்ட பொறியாளர்களின் ஊதிய நிர்ணய பிரச்சனையில் அரசு தரப்பில் அடுத்தகட்ட நடவடிக்கைகளை பேச்சுவார்த்தை மூலம் முன்னெடுக்க மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் உத்தரவிட ஆவன செய்ய வேண்டும் என பணிவுடன் கேட்டுக் கொள்கிறோம்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் வழங்கிய நியாயமான ஊதியத்தினைப் பொறியாளர்களுக்கு மீண்டும் ஆணையிட்டு நீதி வழங்கிடப் பணிவுடன் வேண்டிக் கொள்கிறோம்.

நன்றி,

இணைப்பு: 1. அட்டவணை
2. அரசியல் தலைவர்களின் அறிக்கைகள்

தங்கள் உண்மையுள்ள,

22.12.2025
தலைவர்

22.12.2025
பொதுச் செயலாளர்

---

# வாழ்த்துகிறோம்!

**பொறிஞர் எஸ்.தேவயிரக்கம்,**
சிறப்பு தலைமைப் பொறியாளர்,
பாலங்கள் சிறப்பு ஆய்வு அலகு, சென்னை

அவர்கள் 31.12.2025 அன்று அரசுப் பணியினை நிறைவுச் செய்தார்.
அவர்கள் நலன்கள் பலப் பெற்று பல்லாண்டு வாழ்க எனச் சங்கம் வாழ்த்துகிறது.

**நகல்:**


# தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை பொறியாளர் சங்கம்

'நெடுஞ்சாலைப் பொறியாளர் இல்லம்', 35வி, தாலுகா அலுவலக சாலை, சைதாப்பேட்டை, சென்னை - 600 015

தொலைபேசி எண் : 044 - 2230 0190 / 4312 3792

மின்னஞ்சல் : atnhe.chn@gmail.com / atnhe.chn15@gmail.com

வலைதளம் : www.tnhighwaysengineers.com

| தலைவர் | பொதுச் செயலாளர் | பொருளாளர் |
|---|---|---|
| பொறிஞர் சே.இராமநாதன், பி.இ., | பொறிஞர் ப.வீரமணி, எம்.இ., எம்.பி.ஏ., | பொறிஞர் சொ.தியாகராஜன், எம்.இ., |
| கைபேசி எண்: 88708 88918 | கைபேசி எண்: 97517 04393 | கைபேசி எண்: 98436 40475 |


கடித எண்.422/2025 நாள்: 30.12.2025

பெறுநர்

மாண்புமிகு அமைச்சர் அவர்கள்,
பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை - 600009

மதிப்பிற்குரிய ஐயா,

பொருள்: தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை பொறியாளர் சங்கம் - உதவிப் பொறியாளர், உதவிக் கோட்டப் பொறியாளர் மற்றும் கோட்டப் பொறியாளர் ஊதிய விகித முரண்பாடுகள் களைவது தொடர்பான வேண்டுகோள் - சமர்ப்பித்தல்.

வணக்கம் !

நெடுஞ்சாலைத்துறையில் பணிபுரியும் பொறியாளர்கள் சாலை மற்றும் பாலங்கள் அமைத்துத் தமிழ்நாட்டின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாகத் திகழ்வதற்கு முக்கிய பங்காற்றுகிறார்கள். கன்னியாகுமரி திருவள்ளுர் சிலையுடன் விவேகானந்தர் பாறையினை இணைக்கும் கண்ணாடியினால் அமைக்கப்பட்ட இணைப்பு நடைப்பாலம், தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காக தமிழக அரசு செயற்படுத்தியுள்ள மிகவும் சிறப்பு வாய்ந்த திட்டங்களான அவிநாசி சாலை - ஜீடி.நாயுடு மேம்பாலம் மற்றும் மேலமடை சந்திப்பு - வீரமங்கை வேலு நாச்சியார் மேம்பாலம் ஆகிய திட்டங்கள் குறிப்பிடத்தக்கவை. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கண்ணாடி நடைபாலத்தில் சிறப்பாக பணியாற்றிய பொறியாளர்களுக்கு விடுதலைநாள் விழாவில் சான்றிதழ் வழங்கிப் பாராட்டினார்கள் என்பதை நன்றிப் பெருக்குடன் நினைவு கூர்கிறோம். மேலும், பொறியாளர்கள் தொடர்ந்து சிறப்பாகப் பணியாற்றி நெடுஞ்சாலைத்துறைக்கும்

தமிழ்நாடு அரசுக்கும் பெருமை சேர்த்து வருகிறார்கள் என்பதைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

**முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஆட்சி காலத்தில்**

- 1971 இல் உதவி பொறியாளர்களுக்கு ரூ.400/- என்று 2ஆவது ஊதியக்குழு பரிந்துரைத்த பொழுதும் எங்களது கோரிக்கையை ஏற்று ரூ.425/-ஆக உயர்த்தி வழங்கினார்.
- 1981இல் உதவிப் பொறியாளர்களுக்கு ரூ.1640/- என்று 4ஆவது ஊதியக்குழு பரிந்துரைத்தாலும் எங்களது குறைகளை முறையிட்ட உடன் ரூ.2000/-ஆக பரிவுடன் உயர்த்தி வழங்கினார்.
- 2010ஆம் ஆண்டு பொதுப்பணித்துறைக்கு பொறுப்பு வகித்ததால் 6ஆவது ஊதியக் குழுவில் மருத்துவர்களுக்கு இணையான மற்றும் தொகுதி -1 அலுவலர்களுக்கு இணையான ஊதியத்தை வழங்க வேண்டும் என்ற எங்களது நீண்ட நாள் கோரிக்கையினை ஆராய திரு.ராஜீவ் ரஞ்சன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் ஒருநபர் குழு அமைத்து அதன் பரிந்துரையின் அடிப்படையில் தொழில்நுட்ப வல்லுநர்களுக்கு இணையான ரூ.15600-39100 என்ற ஊதியக்கட்டில் (PB3) ஊதியம் பொறியாளர்களுக்கு வழங்கி ஆணையிட்டார்.
- முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அரசியல் பயணத்தில் முதன்முதலாக பொறுப்பேற்ற பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறைக்கு அமைச்சராகப் பொறுப்பேற்று உள்ளதால் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தாய் உள்ளத்தோடு எப்பொழுதும் எங்களது கோரிக்கைகளை நிறைவேற்றி வந்தவர். அவர்களைப் போன்றே எங்களது இவ்வேண்டுகோளையும் நிறைவேற்றத் தங்களைத்தவிர வேறொருவராலும் இயலாது என்ற நம்பிக்கையோடு இந்தக் கோரிக்கையை பணிவுடன் முன்வைக்கிறோம்.

❖ **6ஆவது ஊதியக்குழு விவரம்**

நெடுஞ்சாலைத்துறையில் பணியாற்றும் பொறியாளர்களுக்கு மருத்துவர்களுக்கு இணையான தொடக்கநிலை ஊதியம் அரசாணை எண். 283, நிதித்துறை, நாள் 26.08.2010ல் வழங்கப்பட்டது.

| வ. எண் | பதவியின் பெயர் | அப்போதைய ஊதியம் + தர ஊதியம் | திருத்தப்பட்ட ஊதியம் +தர ஊதியம் |
|---|---|---|---|
| 1 | உதவிப் பொறியாளர் | ரூ.9300-34800+ 4700 | ரூ.15600-39100+ 5400 |
| 2 | உதவிக் கோட்டப்பொறியாளர் | ரூ.15600-39100+ 5400 | ரூ.15600-39100+6600 |
| 3 | கோட்டப் பொறியாளர் | ரூ.15600-39100+ 6600 | ரூ.15600-39100+7600 |

பொறியாளர்களுக்கு இந்த ஊதிய உயர்வு வழங்கப்பட்டவுடன் வேறு சில அரசு ஊழியர்கள், தங்களுக்கும் பொறியாளர்களுக்கும் ஊதிய முரண்பாடு ஏற்பட்டுள்ளதாக முறையிட்டதால் பொறியாளர்களுக்கு அடிப்படை ஊதியத்தில் 300 ரூபாய் மட்டும் குறைத்து மற்றவர்களுக்கு கூடுதலான ஊதியம் வழங்கப்பட்டது. (அரசாணை எண் 71, நிதித்துறை, நாள் 26.02.2011).

| வ. எண் | பதவியின் பெயர் | ஒருநபர்குழு பரிந்துரைத்து அமல்படுத்தப்பட்ட ஊதியம்+ தர ஊதியம் | திருத்தப்பட்ட ஊதியம் +தர ஊதியம் |
|---|---|---|---|
| 1 | உதவிப் பொறியாளர் | ரூ.15600-39100+5400 | ரூ.15600-39100+5100 |
| 2 | உதவிக் கோட்டப்பொறியாளர் | ரூ.15600-39100+6600 | ரூ.15600-39100+5400 |
| 3 | கோட்டப் பொறியாளர் | ரூ.15600-39100+7600 | ரூ.15600-39100+6600 |

அதன் பிறகு அமைந்த அரசு சிறிய அளவில் ஊதியம் குறைத்தது குறித்து ஏதேனும் கோரிக்கை இருந்தால் அதைச் சொல்வதற்கு அரசு குறைத்தீர் குழுவை நியமித்தது. குறைதீர் குழு 2013ல் சுமார் 15000 பொறியாளர்களுக்கு ஊதிய விகிதத்தை அதிரடியாக மிகவும் குறைத்து ஆணை வழங்கியது (அரசாணை எண். 242, நிதித்துறை, நாள் 22.07.2013).

| வ. எண் | பதவியின் பெயர் | அமல்படுத்தப்பட்டு நீதிமன்றத் தடையாணையால் நிறுத்தப்பட்ட ஊதியம்+ தர ஊதியம் | குறைதீர்குழு 2012 வழங்கிய ஊதியம் +தர ஊதியம் |
|---|---|---|---|
| 1 | உதவிப் பொறியாளர் | ரூ.15600-39100+5400 | ரூ.9300-34800+5100 |
| 2 | உதவிக் கோட்டப்பொறியாளர் | ரூ.15600-39100+6600 | ரூ.15600-39100+5400 |
| 3 | கோட்டப் பொறியாளர் | ரூ.15600-39100+7600 | ரூ.15600-39100+6600 |

மேற்கண்ட ஊதியக் குறைப்பின் காரணமாக உதவிப் பொறியாளர்கள் 12 ஆண்டுகளுக்கு மேலாக நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் ஆறாவது ஊதியக்குழுவில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் உயர்த்தி வழங்கிய ஊதியத்தைப் பெற்று வருகிறார்கள். 2016 ஆம் ஆண்டுக்குப் பிறகு பணியில் சேர்ந்த உதவிப் பொறியாளர்கள் தோராயமாக ரூ.20000/- குறைவாக ஊதியம் பெற்று வருகிறார்கள். இதன் காரணமாக உதவிப் பொறியாளர்கள் இருவேறு ஊதியங்கள் பெறுவதால் குறைவாக ஊதியம் பெறுவர்கள் மிகுந்த மன அழுத்தத்தில் பணியாற்றுகிறார்கள் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் தேர்வாணையம் (TNPSC) மூலம் உதவிப் பொறியாளர் முன்பு எழுத்து மற்றும் நேர்முகத் தேர்வு மூலமாக பணி நியமனம் செய்யப்பட்டது. ஆனால், தற்பொழுது ஊதியக் குறைப்பின் காரணமாக நேர்முக தேர்வுத் இல்லாமல் எழுத்துத் தேர்வு மூலம் மட்டுமே தேர்வு செய்யப்படுவதால் தரமான பொறியாளர்கள் விரும்பிப் பணிக்கு வர இயலாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. முன்பு சிறப்பான தனித்துவமிக்க கல்லூரிகளில் பயின்று சிறப்பு வாய்ந்த பொறியாளர்கள் முதன்மை துறையாக நெடுஞ்சாலைத்துறையைத் தேர்வு செய்து சிறந்த பொறியியல் வல்லுநர்களாகப் பணியாற்றி வருகின்றார்கள். இது தொடர மருத்துவர்களுக்கு இணையாக ஊதியத்தினை வழங்கி உதவிட வேண்டும்.

உதவிப் பொறியாளரிலிருந்து உதவிக் கோட்டப் பொறியாளராகப் பதவி உயர்வு பெற்று அதற்கான ஊதியத்தை ஆறாவது ஊதியக்குழுவின்படி கருவூலத்தினால் வழங்கப்படாதற்கு நிதித்துறையின் கடித எண்.36432, நாள்: 05.01.2023 சுற்றறிக்கை காரணமாகக் காட்டப்படுகிறது. அதன் பிறகு சென்னை உயர்நீதிமன்றம் 04.04.2024 அன்று வழங்கிய இறுதித் தீர்ப்பில் ஒரு நபர் குழு வழங்கிய 2010 ஆம் ஆண்டு ஊதிய ஆணையைத் தவிர அனைத்து அரசாணைகளையும் ரத்து செய்து ஓய்வு பெற்ற நீதியரசர்

சத்திய நாராயண தலைமையில் குழுயமைத்து தீர்வு காண உத்தரவு பிறப்பித்தார். அதன் பிறகு நிதித்துறையின் மூலமாக எந்தவித சுற்றறிக்கையும் வழங்கப்படவில்லை. இதனால் புதிதாகப் பதவி உயர்வு பெற்ற உதவிக் கோட்டப் பொறியாளர்கள் உரிய ஊதியம் பெற முடியாமல் மன அழுத்தத்தில் பணிபுரிகின்றார்கள்.

பொறியாளர்களின் ஊதியக் குறைப்பிற்கு எதிராக மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர் திரு.துரைமுருகன் அவர்களும் அரசியல் கட்சித் தலைவர்களும் கண்டனம் தெரிவித்து மாண்புமிகு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் வழங்கிய ஊதியத்தை குறைக்காமல் மீண்டும் பொறியாளர்களுக்கு வழங்க அப்போதைய அரசை வலியுறுத்திய போதும் முந்தைய அரசு செவி சாய்க்கவில்லை. (கண்டன அறிக்கைகளின் நகல்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன).

சென்னையில் 18.12.2021 அன்று நடைபெற்ற தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை பொறியாளர் சங்கத்தின் புதுப்பிக்கப்பட்ட சங்கக் கட்டடத்தை திறந்து வைத்து ஆற்றிய உரையில் பொறியாளர்களுக்கு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் வழங்கப்பட்ட ஊதியம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தாங்கள் உறுதி அளித்ததை நம்பிக்கையுடன் நினைவு கூர்கிறோம்.

திராவிட மாடல் அரசினை நம்பியுள்ள எங்கள் சங்கத்தின் 1800 உறுப்பினர்கள் மற்றும் அவர்களை நம்பி உள்ள ஆயிரக்கணக்கான குடும்ப உறுப்பினர்களின் வாழ்வாதார பிரச்சனையாக இதைக் கருதி அடுத்தக்கட்ட நடவடிக்கைகளை பேச்சுவார்த்தை மூலம் முன்னெடுக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறோம். இதன் மூலம் கடந்த 15 ஆண்டுகளாகத் தற்போது வரை தொடர்ந்து வரும் ஊதிய நிர்ணயம் தொடர்பான நீதிமன்ற வழக்குகள் அனைத்தும் முடிவுக்கு வரும் சூழ்நிலையும் உருவாகும்.

ஊதியக்குறைப்பு தொடர்பாக 15 ஆண்டுகளாக நடைபெற்று வரும் அனைத்து நீதிமன்ற வழக்குகளிலும் எங்கள் கோரிக்கை வெற்றி பெற்று இருப்பினும் அரசின் ஆணையை ஏற்கும் விதமாக அரசாணை எண்.71, நிதித்துறை, நாள்: 26.06.2011 வழங்கப்பட்ட ரூ.15600-39100+GP5100 ஊதியக்கட்டை ஏற்றுக்கொள்ள எங்கள் சங்க உறுப்பினர்கள் தயராக உள்ளனர்.

எனவே, உதவிப் பொறியாளர்கள் உள்ளிட்ட பொறியாளர்களின் ஊதிய நிர்ணயப் பிரச்சனையை மாண்புமிகு நிதித்துறை அமைச்சர் அவர்களுக்கு எடுத்துரைத்து விரைவில் தீர்வு காண ஆவன செய்யுமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி,

தங்கள் உண்மையுள்ள,

30.12.25 30.12.25

தலைவர் பொதுச் செயலாளர்

இணைப்பு: 1. அட்டவணை

2. அரசியல் தலைவர்களின் அறிக்கைகள்

**நன்றி!**

**எஸ்.அருணாச்சலம்,** தலைமைப் பொறியாளர்
(பணி நிறைவு) சென்னை
அவர்கள் சங்க கட்டிட நிதிக்காக
ரூபாய் ஒரு லட்சம் வழங்கியுள்ளார்.
அவர்களுக்கு சங்கத்தின் சார்பாக
நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

## இணைப்பு

**தமிழகத்திலுள்ள தொழில் நுட்பவியலாளர்கள் பெற்று வரும் 6வது ஊதியக் குழு ஊதியத்துடன் ஒப்பிடுகையில் பொறியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள ஊதியத்தின் விவரம்:-**

| வ. எண் | பதவியின் பெயர் | 6வது ஊதியக் குழு ஊதிய விவரங்கள் (இன்றைய நிலையில்) |
|---|---|---|
| 1 | உதவி மருத்துவர் | ரூ.15600-39100 (ஊதியக் கட்டு 3) தர ஊதியம் 5400 |
| 2 | உதவி மருத்துவர் அலுவலர் - சித்தா, ஆயுர்வேதா, யுனானி | ரூ.15600-39100 (ஊதியக் கட்டு 3) தர ஊதியம் 5400 |
| 3 | உதவி பல் மருத்துவர் | ரூ.15600-39100 (ஊதியக் கட்டு 3) தர ஊதியம் 5400 |
| 4 | உதவி கால்நடை மருத்துவர் | ரூ.15600-39100 (ஊதியக் கட்டு 3) தர ஊதியம் 5400 |
| 5 | அரசு உதவி வழக்குறிஞர் (தரம்-II) | ரூ.15600-39100 (ஊதியக் கட்டு 3) தர ஊதியம் 5400 |
| 6 | உதவிப் பொறியாளர் (பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத்துறை, ஊரக வளர்ச்சித்துறை மற்றும் பிற துறைகள் / அரசு வாரியங்கள்) | ரூ.9300-34800 (ஊதியக் கட்டு 2) தர ஊதியம் 5100 (அரசாணை எண்.404 பரிந்துரைத்த 6வது குழு ஊதியம்) |

**சென்னை வரும் பொறியாளர்கள் நெடுஞ்சாலை பொறியாளர் இல்லத்தில் தங்குக!**

## நமது சங்க நிருவாகிகள் முதன்மை இயக்குநர், தலைமைப் பொறியாளர்கள் 30.12.2025 அன்று நேரில் சந்தித்து சங்கத்தின் நாட்குறிப்பேடு மற்றும் நாட்காட்டி வழங்கி புத்தாண்டு வாழ்த்துத் தெரிவித்தனர்



பொறிஞர் இரா.செல்வதுரை, முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலைத்துறை



பொறிஞர் கு.கோ.சத்தியபிரகாஷ், தலைமைப் பொறியாளர்,
கட்டுமானம் மற்றும் பராமரிப்பு



முனைவர் இரா.கிருஷ்ணசாமி, தலைமைப் பொறியாளர், திட்டங்கள்

## நமது சங்க நிருவாகிகள் தலைமைப் பொறியாளர்கள் 30.12.2025 அன்று நேரில் சந்தித்து சங்கத்தின் நாட்குறிபேடு மற்றும் நாட்காட்டி வழங்கி புத்தாண்டு வாழ்த்துத் தெரிவித்தனர்



பொறிஞர் ஆர்.விமலா, தலைமைப் பொறியாளர்,
சென்னை கன்னியாகுமரி தொழில்தட திட்டம்



பொறிஞர் எஸ்.ஜவஹர் முத்துராஜ், தலைமைப் பொறியாளர், பெருநகரம்



பொறிஞர் பி.செந்தில், தலைமைப் பொறியாளர், நபார்டு மற்றும் கிராமச் சாலைகள்

## 30.12.2025 அன்று சங்க நிருவாகிகள் இயக்குநர் (நெ.ஆ.நி), இணை இயக்குநர் (பயிற்சி மையம்) ஆகியோரை நேரில் சந்தித்து நமது சங்கத்தின் நாட்குறிபேடு மற்றும் நாட்காட்டி வழங்கி புத்தாண்டு வாழ்த்துத் தெரிவித்தனர்



பொறிஞர் எம்.சரவணன், இயக்குநர், நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம்



பொறிஞர் அ.வேங்கடாசலம், இணை இயக்குநர் (பயிற்சி மையம்),
நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம்

---




27.12.2025 அன்று தமிழ்நாடு பொதுப்பணித்துறை மூத்த பொறியாளர்கள் சங்கத்தின் ஆங்கிலப் புத்தாண்டு கலந்துரையாடல் கூட்டம்
சென்னை கோயம்பேட்டில் சிறப்பாக நடைபெற்றது. இக்கூட்டத்தில்
பொதுச் செயலாளர் அவர்கள் கலந்து கொண்டு உரையாற்றினார்

நமது சங்கத்தின் புத்தாண்டு கலந்துரையாடல் மற்றும் நாட்குறிப்பேடு விழா 28.12.2025 அன்று சென்னையில் நடைபெற்றது. விழாவில் கலந்துக் கொண்ட பொறியாளர்களுக்கு நாட்குறிப்பேடு மற்றும் நாட்காட்டி வழங்கி புத்தாண்டு வாழ்த்துகளைத் தெரிவித்தனர்.
























# புத்தாண்டு கலந்துரையாடல்

**வரவேற்புரை - பொறிஞர் சே. இராமநாதன், மாநிலத் தலைவர்**

அனைவருக்கும் எனது அன்பான காலை வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த இனிய புத்தாண்டு கலந்துரையாடல் விழாவில் கலந்துகொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கும் நமது சங்கத்தின் மூத்த பொறியாளர்கள், பொதுச் செயலாளர், பொருளாளர், செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் சங்க உறுப்பினர்கள் அனைவரையும் வருக வருக என அன்புடன் வரவேற்கிறேன்.

நமது சங்கத்தின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று, 2009-ஆம் ஆண்டு பணியில் சேர்ந்த உதவிப் பொறியாளர்களுக்கு, உதவிக் கோட்டப் பொறியாளர்களாகப் பதவி உயர்வு ஆணை வழங்கிய: மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மதிப்பிற்குரிய துறைச் செயலாளர் அவர்களுக்கும், முதன்மை இயக்குநர் அவர்களுக்கும், இந்தத் தருணத்தில் நமது சங்கத்தின் சார்பாக நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். புத்தாண்டு வாழ்த்துக்கள்: பிறக்கவிருக்கும் இந்தப் புத்தாண்டில், நாம் அனைவரும் மன அமைதியுடனும், நல்ல எண்ணங்களுடனும் இணைந்து நமது சங்கத்தை இன்னும் வலிமையான பாதையில் வழிநடத்திச் செல்வோம் என உறுதி ஏற்போம். அனைவருக்கும் எனது மனமார்ந்த புத்தாண்டு நல்வாழ்த்துக்களைப் பகிர்ந்து கொள்கிறேன்.

**சிறப்புரை:**

**பொறிஞர் ப.நரசிம்மன், உதவி கோட்டப் பொறியாளர், சென்னை - கன்னியாகுமரி தொழிற்தடத் திட்டம், அரக்கோணம்.**

அனைவருக்கும் இனிய காலை வணக்கம். 2025-ஆம் ஆண்டு விடைபெற்று, 2026-ஆம் ஆண்டை நாம் ஆவலுடன் எதிர்நோக்கியிருக்கும் இந்த இனிய தருணத்தில் உங்கள் அனைவரையும் சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

முக்கியமாக, நெடுஞ்சாலைத்துறை பொறியாளர் சங்கத்திற்கு எனது மனமார்ந்த நன்றிகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். 2009-ஆம் ஆண்டு பணியில் சேர்ந்த உதவிப் பொறியாளர்கள் அனைவரும், இன்று உதவி கோட்டப் பொறியாளர்களாகப் பதவி உயர்வு பெற்றிருப்பதற்குச் சங்கத்தின் அயராத உழைப்பும், எடுத்த பெரும் முயற்சிகளுமே முக்கியக் காரணம்.

சங்கத்தின் தளராத இந்த முயற்சியால் தான் இன்று இத்தனை பேரும் இந்த நிலையை எட்டியிருக்கிறோம் என்பதை நாம் அனைவரும் அறிவோம். இதற்காக நாங்கள் எப்போதும் சங்கத்திற்கு நன்றி கடன் பட்டுள்ளோம்.

இதேபோன்ற உத்வேகத்துடன், பொறியாளர்களின் மற்ற கோரிக்கைகளையும், பிரச்சனைகளையும் சங்கம் விடாமுயற்சியுடன் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு" என்ற பொன்மொழிக்கேற்ப, நாம் அனைவரும் ஒற்றுமையுடன் செயல்பட்டு சங்கத்தைப் பலப்படுத்துவோம். இந்தக் கலந்துரையாடல் கூட்டத்தில் பங்கேற்றுள்ள அனைத்துப் பொறியாளர் நண்பர்களுக்கும் எனது மனமார்ந்த புத்தாண்டு நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்

**பொறிஞர் அ. கிருஷ்ணன், துணைத் தலைவர்**

அனைவருக்கும் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள் இந்த புத்தாண்டு கலந்துரையாடல் விழாவில் மேடையில் வீற்றிருக்கும் நமது சங்கத்தின் மதிப்பிற்குரிய தலைவர் அவர்களுக்கும், பொதுச்செயலாளர் அவர்களுக்கும், பொருளாளர் அவர்களுக்கும் எனது வணக்கத்தைத்

தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், இங்கு திரளாகக் கூடியிருக்கும் சங்க உறுப்பினர்களுக்கும், வழிநடத்தும் மூத்த பொறியாளர்களுக்கும் எனது முதற்கண் வணக்கத்தை உரித்தாக்குகிறேன்."

"உதவிப் பொறியாளர்களாகிய எங்களுக்கு, உதவிக் கோட்ட பொறியாளர்களாகப் பதவி உயர்வு கிடைக்க வேண்டும் என்பது ஒரு நீண்ட நெடிய போராட்டமாகும். இந்த இலட்சியத்தை எட்ட எங்களுக்கு உற்ற துணையாகவும், உறுதியாகவும் இருந்த நமது சங்கத்திற்கு எனது மனமார்ந்த நன்றிகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல், இந்தப் பதவி உயர்வு ஆணை விரைவாகக் கிடைப்பதற்கு அயராத முயற்சி மேற்கொண்ட முதன்மை இயக்குநர் அவர்களுக்கும், உறுதுணையாக இருந்த மூத்த பொறியாளர்களுக்கும் மற்றும் அலுவலகப் அமைச்சுப் பணியாளர்களுக்கும், நமது சங்கத்தின் சார்பாக எனது நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்."

"நமது சங்கம் பதவி உயர்வுடன் நின்றுவிடாமல், பொறியாளர்களின் பல்வேறு கோரிக்கைகள், குறிப்பாக ஊதியம் தொடர்பான முரண்பாடுகளைக் களைவதற்காக மாண்புமிகு அமைச்சர் பெருமக்களைச் சந்தித்து மனுக்களை அளித்துள்ளது. நமது உரிமைகளுக்காகத் தொடர்ந்து குரல் கொடுத்து வரும் சங்கத்தின் செயல்பாடுகள் பாராட்டுக்குரியவை."

"மீண்டும் ஒருமுறை உங்கள் அனைவருக்கும் எனது உளங்கனிந்த புத்தாண்டு நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். வாய்ப்பளித்தமைக்கு நன்றி.

**பொறிஞர் ஜி.விஜயராகவன், செயலாளர்**

அனைவருக்கும் இனிய வணக்கம். நமது சங்கத்தின் செயலாளராக முதன்முதலாகப் பொறுப்பேற்று உங்கள் முன்னால் நிற்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சியும் பெருமையும் கொள்கிறேன். என் மீது நம்பிக்கை வைத்து இந்தப் பொறுப்பை வழங்கிய அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

நமது சங்கத்தின் முக்கிய மைல்கல்லாக, 2009-ஆம் ஆண்டு பணியில் சேர்ந்த உதவிப் பொறியாளர்கள் அனைவரும், இன்று உதவி செயற்பொறியாளர்களாகப் பதவி உயர்வு பெற்றுள்ளது ஒரு மிகப்பெரிய சாதனையாகும். இந்த மகிழ்ச்சியான தருணத்தில், பதவி உயர்வு வழங்கிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், முதன்மை இயக்குநர் அவர்களுக்கும் நமது சங்கத்தின் சார்பாக நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பதவி உயர்வு பெற்றுள்ள அனைத்துப் பொறியாளர்களுக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களையும், உங்கள் அனைவருக்கும் இனிய ஆங்கில புத்தாண்டு நல்வாழ்த்துக்களையும் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த இனிய சூழலில், சங்கத்தின் செயலாளராக இரண்டு முக்கிய கோரிக்கைகளை நான் முன்வைக்க விரும்புகிறேன்: 2026-ஆம் ஆண்டின் நமது முதல் கோரிக்கையாக, நீண்ட நாட்களாக நிலுவையில் உள்ள பொறியாளர்களின் ஊதியப் பிரச்சனைகளுக்கு உரிய தீர்வு காண சங்கம் உடனடியாகத் தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

தற்போது பொறியாளர்கள் பதவி உயர்வு பெறும் சமயத்தில், மந்தண அறிக்கையைப் பெறுவதற்காகப் பெரும் சிரமத்திற்கு உள்ளாகிறார்கள். இந்த முறையை எளிமைப்படுத்தி, ஒவ்வொரு வருடமும் அந்தந்த அலுவலகங்களிலேயே மந்தண அறிக்கையைப் பெற்று, எவ்வித தடையுமின்றி தகுதியுள்ள பொறியாளர்களுக்குப் பதவி உயர்வு கிடைக்க ஆவன செய்ய வேண்டும் என வேண்டுகோள் விடுக்கிறேன்.

நமது சங்கம் என்றும் பொறியாளர்களின் நலனுக்காகப் பாடுபடும் என்பதை உறுதி கூறி, வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்!

**பொறிஞர் நெ ஜாகிர் உசேன், செயற்குழு உறுப்பினர்.**

அனைவருக்கும் இனிய காலை வணக்கம். இந்தப் புத்தாண்டு கலந்துரையாடல் விழாவில் கலந்து கொண்டுள்ள சக பொறியாளர் பெருமக்கள் அனைவருக்கும் எனது நெஞ்சார்ந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சங்கத் தேர்தல் முடிவடைந்த கையோடு, "அடுத்து நாம் என்ன செய்யப் போகிறோம்? சங்கத்தின் எதிர்காலம் எப்படி அமையும்?" என்ற பல கேள்விகள் அனைவர் மத்தியிலும் இருந்தன. ஆனால், "தொட்ட காரியம் அனைத்திலும் வெற்றி" (Everything should be a success) என்ற ஒற்றை இலக்கோடு, மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வரும் நமது சங்கத்தின் தலைவர், பொதுச்செயலாளர் மற்றும் பொருளாளர் ஆகியோருக்கு எனது மனமார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குறிப்பாக, 2009-ஆம் ஆண்டு உதவிப் பொறியாளர்களின் பதவி உயர்வு குறித்து நாம் கடந்த ஐந்து மாதங்களாகப் பெரும் கவலையில் இருந்தோம். "15 பேருக்குக் கிடைக்குமா அல்லது 20 பேருக்குக் கிடைக்குமா?" என்ற இழுபறி நிலையில் நாம் இருந்தபோது, நமது சங்கத் தலைமையின் விடாமுயற்சியால், இன்று 48 பொறியாளர்களுக்குப் பதவி உயர்வு ஆணை கிடைத்துள்ளது. இது நமது சங்கத்தின் வலிமைக்கும் உழைப்பிற்கும் கிடைத்த மிகப்பெரிய வெற்றியாகும்.

பதவி உயர்வு ஆணையை வழங்கிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், உறுதுணையாக இருந்த அரசுச் செயலாளர் அவர்களுக்கும், முதன்மை இயக்குநர் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளை இத்தருணத்தில் சமர்ப்பிக்கின்றேன்.

நமது சங்கத்தின் முன்னால் இன்னும் பல கோரிக்கைகள் நிலுவையில் உள்ளன. அவை அனைத்தையும் நாம் ஒற்றுமையுடன் வென்றெடுப்போம். பிறந்துள்ள இந்த 2026-ஆம் ஆண்டு, நமது கோரிக்கைகள் அனைத்தும் நிறைவேறும் ஒரு பொற்கால ஆண்டாக அமைய இறைவனை வேண்டுகிறேன். நன்றி, வணக்கம்

**பொறிஞர் ஜி.குரு, மண்டல இணைச் செயலாளர் (விழுப்புரம்)**

மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, பொதுச்செயலாளர் அவர்களே, பொருளாளர் அவர்களே மற்றும் இங்கு வருகை தந்துள்ள மூத்த பொறியாளர்கள் உள்ளிட்ட, உங்கள் அனைவருக்கும் எனது அன்பான காலை வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நமது சங்கத்தின் வளர்ச்சிக்கும், பொறியாளர்களின் நலனுக்கும் இந்தத் தளம் மிக முக்கியமானது. அந்த வகையில், ஒரு முக்கியமான நடைமுறைச் சிக்கலை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

ஒவ்வொரு முறையும் பதவி உயர்வு வரும்போது, அதற்கான மந்தண அறிக்கையைப் பெறுவது என்பது நமக்கு ஒரு பெரும் போராட்டமாகவே அமைந்து விடுகிறது.

2009-ம் ஆண்டு உதவிப் பொறியாளர்களுக்குப் பதவி உயர்வு வழங்கப்பட்ட போது, மந்தண அறிக்கை பெறுவதற்காக நாம் மூத்த பொறியாளர்களைத் தனித்தனியாகச் சந்தித்து அலைக்கழிக்கப்பட்டதை நாம் அறிவோம். அது ஒரு பெரும் போராட்டமாகவே அமைந்தது.

இனிவரும் காலங்களில் இத்தகைய சிரமங்களைத் தவிர்க்க, ஒவ்வொரு வருடமும் முறையாக மந்தண அறிக்கையைப் பெற்று, அந்தந்தப் பொறியாளர்களின் கோப்புகளில் இணைப்பதை உறுதி செய்ய வேண்டும்.

பதவி உயர்வு வரும் நேரத்தில் மட்டும் அவசரமாகத் தேடாமல், ஆண்டுதோறும் இதனை முறைப்படுத்த நிர்வாகத்திடம் பேசி உரிய நடவடிக்கை எடுக்குமாறு நமது சங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன். இதன் மூலம் தகுதியுள்ள பொறியாளர்களுக்கு எவ்விதத் தடையுமின்றி உரிய காலத்தில் பதவி உயர்வு கிடைக்க வழிவகை செய்ய வேண்டும். நன்றி, வணக்கம்!

**பொறிஞர் எம்.கே. சரவணன், உதவிக் கோட்டப் பொறியாளர், கட்டுமான மற்றும் பராமரிப்பு, கும்மிடிப்பூண்டி.**

அனைவருக்கும் வணக்கம், மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, பொதுச் செயலாளர் அவர்களே, பொருளாளர் அவர்களே மற்றும் இங்கே கூடியிருக்கும் மூத்த பொறியாளர்களே, சக பொறியாளர் நண்பர்களே... உங்கள் அனைவருக்கும் எனது பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தற்போது பொறுப்பில் இருக்கும் சங்க நிர்வாகிகள் மிகச் சிறப்பான முறையிலும், அர்ப்பணிப்பு உணர்வோடும் செயல்பட்டு வருகிறார்கள். குறிப்பாக, பொறியாளர்களின் நீண்ட நாள் கோரிக்கைகளான ஊதிய உயர்வுப் பிரச்சினைகள் மற்றும் தெரிவுநிலை ஊதிய உயர்வு (Selection Grade) போன்றவற்றில் நிலவி வந்த சிக்கல்களைக் களைவதற்கு அவர்கள் எடுத்து வரும் தொடர் நடவடிக்கைகள் பாராட்டுக்குரியவை.

முக்கியமாக ஒரு விஷயத்தை இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன். 2009-ஆம் ஆண்டு பேட்ச் உதவிப் பொறியாளர்களுக்குப் பதவி உயர்வு பெறுவது என்பது ஒரு மிகப்பெரிய சவாலாக இருந்தது. இளநிலை பொறியாளர்கள் தொடர்ந்த பல்வேறு வழக்குகளால் பல முட்டுக்கட்டைகள் உருவாயின.

அந்த இக்கட்டான சூழலிலும், சங்க நிர்வாகிகள் மனம் தளராமல், முதன்மை இயக்குநர் அவர்களைப் பலமுறை நேரில் சந்தித்து, சட்ட ரீதியாகவும், நிர்வாக ரீதியாகவும் அழுத்தங்களைக் கொடுத்து, அந்தத் தடைகளை உடைத்தெறிந்தார்கள். அதன் விளைவாகவே இன்று பதவி உயர்வு சாத்தியமாகி இருக்கிறது. இதற்காகச் சங்க நிர்வாகிகளுக்கு எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நமது சங்கம் இதுபோலவே வரும் காலங்களிலும் பொறியாளர்களின் நலன் காக்க, மென்மேலும் எழுச்சியுடனும், வலிமையுடனும் செயல்பட வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். வாய்ப்பளித்தமைக்கு நன்றி. வணக்கம்!

**ஏற்புரை- பொறிஞர் வீரமணி, மாநில பொதுச் செயலாளர்**

அனைவருக்கும் வணக்கம், நமது நெடுஞ்சாலைத்துறை பொறியாளர் சங்கத்தின் சார்பாக, 2026 புத்தாண்டை முன்னிட்டு இந்த கலந்துரையாடல் கூட்டத்தை ஏற்பாடு செய்துள்ளோம். மூத்த பொறியாளர்களின் அனுபவமும் அறிவுரையும் பெற்று, நமது சங்கத்தை மேலும் சிறப்பாகவும் உறுதியுடனும் முன்னெடுக்க வேண்டும் என்ற நோக்கத்திலேயே இந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எங்களது அழைப்பை ஏற்று இங்கு வருகை தந்த மூத்த பொறியாளர் திரு. சந்திரசேகரன் அவர்களுக்கும், துணை இயக்குநர் முனைவர் ராமலிங்கம் அவர்களுக்கும், மூத்த பொறியாளர் திரு. இளங்கோவன் அவர்களுக்கும், மூத்த பொறியாளர் திரு. கருணாநிதி அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், கடுமையான பணிச்சுமைகளுக்கிடையிலும் இக்கூட்டத்தில் பங்கேற்றுள்ள நமது சங்க நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் அனைவருக்கும் என் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

நாங்கள் நீண்ட இடைவெளிக்குப் பிறகு சங்கத் தேர்தலை சந்தித்து, அதன்மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு, பொறியாளர்களுக்கு சேவை செய்யும் பொறுப்பை ஏற்றுள்ளோம். நமது சங்கத்தில் பல சவாலான கோரிக்கைகள் உள்ளன. அதில் முதன்மையான கோரிக்கையாக, உதவிப் பொறியாளர்களிலிருந்து உதவிக் கோட்டப் பொறியாளராகப் பதவி உயர்வு பெறுவதில் அவர்கள் மிகுந்த சிரமங்களை எதிர்கொண்டு வந்தனர். அந்தச் சிரமங்களை உணர்ந்து, சங்கம் அவர்களுடன் இணைந்து வழிகாட்டுதல்களை வழங்கி, பல போராட்டங்களின் மூலம் இந்தப் பதவி உயர்வை பெற்றுக் கொடுத்துள்ளது என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இளநிலை பொறியாளர்களுக்கு 3:1 விகிதத்தில் பதவி உயர்வு வழங்கப்பட வேண்டும். ஆனால் அவர்கள் 10 ஆண்டுகள் பணி நிறைவு செய்த பின்னரே தகுதி பெறும் நிலை இருந்தது. தகுதி பெறாத நிலையிலேயே அவர்களுக்கான காலிப்பணியிடங்களை ஒதுக்கீடு செய்து பதவி உயர்வு வழங்க வேண்டும் என்ற நியாயமான கோரிக்கையுடன் சங்கம் உறுதியுடன் செயல்பட்டது. அந்தக் கோரிக்கையை ஏற்று, மாண்புமிகு அமைச்சர் அவர்களும், துறைச் செயலாளர் அவர்களும் அனைவருக்கும் மகிழ்ச்சியும் மனநிறைவும் அளிக்கும் வகையில் இந்த பதவி உயர்வை வழங்கியதற்காக அவர்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்ததாக, நமது சங்கக் கட்டிடத்தை விரைவில் கட்டி முடிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். நமது சங்கக் கட்டிடம், குறிப்பாக பெண் பொறியாளர்களுக்கு மிகவும் பாதுகாப்பானதும் பயனுள்ளதுமான இடமாக விளங்குகிறது. பணிநிமித்தமாக வெளிமாவட்டங்களில் இருந்து வரும் பொறியாளர்களுக்கும், மூத்த பொறியாளர்களுக்கும் பாதுகாப்பான தங்குமிடமாக நமது சங்கக் கட்டிடம் செயல்பட்டு வருகிறது. எனவே, அனைத்து பாகுபாடுகளையும் நீக்கி, எந்த தடையும் இருந்தாலும் அவற்றை சரி செய்து, பணியை பாதியில் நிறுத்தாமல், சங்கக் கட்டிடத்தை முழுமையாக கட்டி முடித்து உறுப்பினர்களின் பயன்பாட்டிற்காக செயல்படுத்துவது நமது கடமையாகும்.

அடுத்ததாக, நமது ஊதியப் பிரச்சினை குறித்து குறிப்பிட விரும்புகிறேன். அரசாணை எண் 242 இன் படி நமது ஊதியம் குறைக்கப்பட்டுள்ளது. அதற்கு முன் வழங்கப்பட்ட அரசாணை எண்.71-ன்படி வழங்கப்பட்ட ஊதியம் பெரும் பாதிப்பில்லாததால், அதனை தொடர்ந்து வழங்க வேண்டும் எனக் கோரி, மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் மனு அளித்துள்ளோம். அமைச்சரை நேரில் சந்தித்து, பதவி உயர்வு வழங்கியதற்காக நன்றி தெரிவித்து, அரசாணை எண்.71-ன்படி ஊதியம் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையையும் வலியுறுத்த உள்ளோம். இந்த விஷயத்தில் அமைச்சர் நினைத்தால் மட்டுமே தீர்வு கிடைக்கும் என்ற நிலை இருப்பதால், மூத்த பொறியாளர்கள் அனைவரும் ஊதியப் பிரச்சினையை அவரிடம் எடுத்துரைத்து தீர்வு பெற்றுத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தெரிவு நிலை ஊதியம் பெறாத பொறியாளர்களிடமிருந்து விண்ணப்பங்களை நமது சங்கம் சேகரித்து வருகிறது. அவற்றை அரசுக்கு அனுப்பி ஒப்புதல் பெற தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

முதுநிலைப் பட்டப் படிப்பிற்கான ஊதிய உயர்வு பெறாத உறுப்பினர்களிடமிருந்து படிவங்களை பெற்று, முதன்மை இயக்குநர் அவர்களிடம் சமர்ப்பித்துள்ளோம். இது தொடர்பாக உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

மந்தன அறிக்கை தொடர்பாகவும், தனி மனு ஒன்று தயாரித்து முதன்மை இயக்குநர் அவர்களிடம் அளிக்கப்பட உள்ளது. பதவி உயர்வுகளில் மந்தன அறிக்கைகள் காரணமாக பெரும் தாமதம் ஏற்படுகிறது. கோட்ட பொறியாளர்கள் மற்றும் கண்காணிப்பு பொறியாளர்கள் பணி ஓய்வு அல்லது பணிமாற்றம் பெறும் போது, மந்தன அறிக்கையில் கையொப்பமிடாமல் செல்லுவதால், ஒரு சிலர் பொறியாளர்கள் பதவி உயர்வு இருக்கு என்று தெரிந்து வேண்டுமென்றே தாமதப்படுத்தப்படுவதுவதால் மனஅழுத்தத்திர்க்கு உள்ளாகின்றர்கள் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கின்றேன். ஆகவே, ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 31 முடிந்த உடன் மந்தன அறிக்கைகளை அனுப்பி வைக்குமாறு, அந்தந்த கண்காணிப்பு பொறியாளர்களுக்கு சுற்றறிக்கை அனுப்ப வேண்டும் என முதன்மை இயக்குநர் அவர்களிடம் கேட்டுக்கொள்கின்றேன்.

சாலை மற்றும் பாலப் பணிகளை மேற்கொள்ளும் போது, முறையான பாதுகாப்பு உபகரணங்களை மதிப்பீட்டில் சேர்த்து பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இதனை கண்காணிக்க, சாலை பாதுகாப்பு அலகில் கூடுதல் உதவிப் பொறியாளர்களை நியமிக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொள்கிறேன்.

வரும் புத்தாண்டில், நமது சங்கத்தை மேலும் சிறப்பாக செயல்படுத்தி, இதுவரை ஏற்பட்ட குறைகளிலிருந்து பாடம் கற்றுக்கொண்டு, சங்கத்திற்கு பெருமை சேர்த்து, சங்க உறுப்பினர்களின் நலனை முழுமையாகக் காப்போம் என்ற உறுதியுடன், இந்த ஏற்புரையை நிறைவு செய்கிறேன். நன்றி வணக்கம்.

**நன்றியுரை - பொறிஞர் தியாகராஜா, பொருளாளர்**

"உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்"

என்பது வள்ளுவரின் வாக்கு, தாம் கற்றவற்றை பிறருக்கு கற்று கொடுத்து உள்ளதால் பிரியாமல் உடலால் மட்டும் பிரிவதே கற்றறிந்தவர்களின் செயலாகும்.

விழாவிற்கு வருகை புரிந்திருக்கும் மூத்த பொறியாளர்கள், கண்காணிப்பு பொறியாளர்கள், கோட்ட பொறியாளர்கள், விழாவை சிறப்பாக நடத்திக் கொண்டிருக்கும் தலைவர் மற்றும் பொதுச் செயலாளர் அவர்களுக்கும் மாநில செயற்குழு உறுப்பினர்களுக்கும் உதவி பொறியாளர்களுக்கும் எனது இதயக்கனிந்த வணக்கத்தை இந்த வேலையில் தெரிவித்துக் கொள்கிறேன். 2026 ஆம் ஆண்டின் அடியெடுத்து வைக்கும் நாம் அனைவருக்கும் 2026 ஆம் ஆண்டு சிறப்பான ஆண்டாக அமையும் என்று கூறி 2009 ஆம் ஆண்டு பணியில் சேர்த்த அத்துணை உதவிப் பொறியாளர்களுக்கும் ஒரே நாளில் பதவி உயர்வு அளித்து நாம் அனைவரையும் மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்த்திய மாண்புமிகு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்களுக்கும் அரசுச் செயலாளர் அவர்களுக்கும் முதன்மை இயக்குநர் அவர்களுக்கும் சங்கத்தின் சார்பாகவும் 2009 இல் பணியில் சேர்ந்த அத்தனை பொறியாளர்கள் சார்பாகவும் அவர்களுடைய பொற்பாதங்களில் நன்றியினை சமர்ப்பிக்கின்றேன். 2010 ஆம் ஆண்டு திருச்சியில் நடைபெற்ற நமது சங்கத்தின் பொதுக்குழு கூட்டத்தில் டைம் பவுண்ட் ப்ரோமோஷன் பற்றி பேசி இருந்தேன். முதல் நிலை பதவி உயர்வு பெறுவதற்கு 17 ஆண்டுகள் காத்திருக்க வேண்டிய சூழ்நிலை நெடுஞ்சாலைத்துறையில் மட்டும்தான் பொறியாளர்களுக்கு உள்ளது. மேலும் மந்தன அறிக்கையை பற்றிய எல்லோருடைய விவாதங்களும் ஏற்றுக்கொள்ளப்பட்டு நாளை முதன்மை இயக்குனரிடம் கலந்து ஆலோசனை பெறுவோம்.

2009 ஆம் ஆண்டு எங்களுடன் பணியில் சேர்ந்த பொறியாளர்கள் பொதுப்பணித்துறையில் மற்றும் நீர்வளத் துறையில் இரண்டு பதவியை உயர்வுகள் பெற்று விட்டார்கள். நெடுஞ்சாலைத் துறையில் மட்டும் 17 ஆண்டுகள் காத்திருக்க வேண்டிய நிலை உள்ளது. இந்த நிலை மாற வேண்டும். இந்த நிலையை மாற்றுவதற்கு முதன்மை இயக்குநரிடம் பரிந்துரை செய்வோம்.

பதவி உயர்வு என்பது

துடித்தெழும் உணர்ச்சியில்
வெடித்திடும் ஊற்று
கற்பனை வானின்
மின்னல் கீற்று
கலையெழில் வழிந்திட
முளைக்கும் நாற்று
கன்னல் மொழியில்
மணக்கும் காற்று

இது கலைஞரின் கூற்று

எனவே, 2012 ஆம் ஆண்டு பணியில் சேர்ந்த பொறியாளர்களுக்காவது விரைவில் பதவி உயர்வு வழங்கிட வழி வகை செய்வோம் .இவ்விழாவிற்கு தனது பொன்னான நேரத்தை ஒதுக்கி வருகை புரிந்திருக்கும் மூத்த பொறியாளர்களுக்கும் பயிற்சி மையம் கோட்டப் பொறியாளர் அவர்களுக்கும் அளவில்லாத நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சங்கத்தின் தலைவர், துணைத்தலைவர், பொதுச் செயலாளர், செயலாளர், செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் இங்கு வருகை புரிந்திருக்கும் உதவிக் கோட்டப் பொறியாளர்கள், உதவிப் பொறியாளர்கள் அனைவருக்கும் சங்கத்தின் சார்பாக கனிவான நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். விழாவை சிறப்பாக அமைத்து சங்கத்திற்கு உதவியாக இருக்கும் சங்கப் பணியாளர்கள் அனைவருக்கும் சங்கத்தின் சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன் நன்றி வணக்கம்!

## 11.01.2026 அன்று நடைபெற்ற 2026ஆம் ஆண்டிற்கான முதல் செயற்குழுக் கூட்ட நடவடிக்கைகள்

துணைத் தலைவர் பொறிஞர் சோ.பாண்டியன் அவர்கள் தலைமையில் திருச்சி ஹோட்டல் கண்ணப்பாவில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் விவரம்

| வ.எண் | பதவி |
|---|---|
| 1. | பொறிஞர் சே.இராமநாதன், தலைவர் |
| 2. | பொறிஞர் அ.கிருஷ்ணன், துணைத் தலைவர் |
| 3. | பொறிஞர் ப.வீரமணி, பொதுச் செயலாளர் |
| 4. | பொறிஞர் ஜி.விஜயராகவன், செயலாளர் |
| 5. | பொறிஞர் சொ.தியாகராஜா, பொருளாளர் |
| 6. | பொறிஞர் பி.அசோக்குமார், செயற்குழு உறுப்பினர் |
| 7. | பொறிஞர் எஸ்.கண்ணன், செயற்குழு உறுப்பினர் |
| 8. | பொறிஞர் ஜி.முத்து முனி குமாரி, செயற்குழு உறுப்பினர் |
| 9. | பொறிஞர் சி.நடராஜன், செயற்குழு உறுப்பினர் |
| 10. | பொறிஞர் ஜெ.பிரேம் ஆனந்த், செயற்குழு உறுப்பினர் |
| 11. | பொறிஞர் கே.ஸ்ரீராம், செயற்குழு உறுப்பினர் |
| 12. | பொறிஞர் பி.விமல்ராஜ், செயற்குழு உறுப்பினர் |
| 13. | பொறிஞர் ந.கோட்டை ராவுத்தர், செயற்குழு உறுப்பினர் |
| 14. | பொறிஞர் ரா.முத்து முருகன், செயற்குழு உறுப்பினர் |
| 15. | பொறிஞர் ந.முருகானந்தம், செயற்குழு உறுப்பினர் |
| 16. | பொறிஞர் நெ.ஜாஹிர் உசேன், செயற்குழு உறுப்பினர் |
| 17. | பொறிஞா ஜி.குரு, மண்டல இணைச் செயலாளர் (விழுப்புரம்) |
| 18. | பொறிஞர் வி.ரவிக்குமார், மண்டல இணைச் செயலாளர் (திருச்சி) |

**செயற்குழுவில் நடைபெற்ற விவாதங்களுக்குப் பிறகு கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஒரு மனதாக நிறைவேற்றப்பட்டன.**

1. சங்க அமைப்பு விதி 17-ன்படி செயற்குழு கூட்டம் 11.01.2026 அன்று திருச்சி கண்ணப்பா ஹோட்டலில் நடைபெற்றது. அதில் நடைபெற்ற விவாதத்தில் 05.10.2025 அன்று நடைபெற்ற செயற்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை ஏற்றுக் கொள்ள முடியாத என்றும், மேலும், 11.01.2026 அன்று முன்மொழிந்த தீர்மானங்களில் உடன்பாடு இல்லை என்பதால் தலைவர் பொறிஞர் சே.இராமநாதன் அவர்கள் தனது பதவியை இராஜினாமா செய்து கொள்கிறேன் என்று கூறி விட்டு செயற்குழுவில் இருந்து பாதியிலே வெளிநடப்பு செய்து விட்டதால் தொடர்ந்து செயற்குழு நடத்த செயற்குழு உறுப்பினர்கள் ஒப்புதலுடன் துணைத் தலைவர் பொறிஞர் சோ.பாண்டியன் அவர்கள் செயற்குழுவை தலைமையேற்று நடத்திட ஒரு மனதாகத் செயற்குழு தீர்மானிக்கப்படுகிறது.

2. நமது சங்கத்தின் தொடர் கோரிக்கைகளை ஏற்று 2009ஆம் ஆண்டு உதவிப் பொறியாளராக பணியில் சேர்ந்த பொறியாளர்கள் அனைவருக்கும் உதவிக் கோட்டப் பொறியாளராக பதவி உயர்வு வழங்கிய மாண்புமிகு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்களுக்கும், அரசுச் செயலாளர் அவர்களுக்கும் முதன்மை இயக்குநர் அவர்களுக்கும் சங்கத்தின் சார்பாக நன்றி தெரிவித்து செயற்குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

3. உதவிக் கோட்டப் பொறியாளராக பதவி உயர்வு பெற்றுள்ள மாநில சங்க நிருவாகிகள் பொருளாளர் பொறிஞர் சொ.தியாகராஜா அவர்களுக்கும் துணைத் தலைவர் - பொறிஞர் அ.கிருஷ்ணன் அவர்களுக்கும் செயற்குழு உறுப்பினர்கள் பொறிஞர் நெ.ஜாஹிர் உசேன், திருமதி ஜி.முத்து மணி குமாரி ஆகியோருக்கு சங்கத்தின் சார்பாக வாழ்த்துகள் தெரிவித்து செயற்குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

4. சாலை மற்றும் பாலப் பணிகளை மேற்கொள்ளும் போது, முறையான பாதுகாப்பு உபகரணங்களை மதிப்பீட்டில் சேர்த்து பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இதனை கண்காணிக்க, சாலை பாதுகாப்பு அலகில் கூடுதல் உதவிப் பொறியாளர்களை நியமிக்க வேண்டும் என இச்செயற்குழுவில் வலியுறுத்துவதென தீர்மானிக்கப்பட்டது.

5. 6-வது ஊதியக்குழு அமல்படுத்தப்பட்ட காலம் வரை, மருத்துவர்கள், கால்நடை மருத்துவர்கள், அரசு வழக்கறிஞர்கள் போன்ற சமமான கல்வித்தகுதி மற்றும் பொறுப்புகளைக் கொண்ட தொழில்நுட்பத் துறையினருக்கு இணையான ஊதியம் பெற்று வந்தது போல பொறியாளர்களுக்கு இணையான கல்வித் தகுதி பெற்றவர்களுக்குச் சமமான ஊதியம் வழங்கப்பட வேண்டும். தற்போது பிறதுறையினர்; PB-3 (₹15>600-39>100) ஊதியக்கட்டில் உள்ள நிலையில், பொறியாளர்கள் மட்டும் PB-2 (₹9>300-34>800) எனக் குறைக்கப்பட்டு அதற்கு இணையான 7வது ஊதிய குழுவின்படி ஊதியம் பெறுவது கடும் அநீதி எனச் சங்கம் கருதுகிறது. மத்திய அரசின் 8-வது ஊதியக்குழு அறிவிப்பு வெளியாகியுள்ள இந்நேரத்தில் சமூக நீதி, சமத்துவம் மற்றும் உழைப்பிற்கான மரியாதை என்பவற்றை அடிப்படைக் கோட்பாடுகளாகக் கொண்ட திராவிடமாடல் ஆட்சியின் முதல்வர் அவர்களும், மற்றும் நிதித்துறை அமைச்சர் அவர்களும் தலையிட்டு, நெடுஞ்சாலைத்துறை பொறியாளர்களுக்கு எதிராக 15 ஆண்டுகளாக நீடித்துவரும் ஊதியச் சமநிலையின்மைக்கு நிரந்தரத் தீர்வு காண வேண்டும் எனச் சங்கம் கோரிக்கை விடுத்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

6. நமது சங்கத்தின் 5 வருடங்களுக்கு மேல் பணிபுரியும் பணியாளர்களுக்கு மாதந்தோறும் அஞ்சல் அலுவலகத்தில் தொடர் வைப்புத் திட்டம் (Recurring Deposit scheme) மூலமாக தொகை செலுத்தி வங்கி சேமிப்புப் புத்தகத்தில் வைக்கப்படும் என்று செயற்குழுவில் தீர்மானிக்கப்பட்டது. சங்கம் வழங்கிய தொகைக்கு இணையான தொகையை பணியாளர்களும் செலுத்தி சேமிப்பு புத்தகத்தில் வைப்பு (Deposit) செய்து சங்க அலுவலகத்தில் மாதந்தோறும் ஒப்படைக்க வேண்டும்.

I. திரு.சே.சத்தியசீலன் (18 ஆண்டுகளுக்கு மேல்) ரூ.1000/-

II. திரு.சி.யுவராஜ் (5 ஆண்டுகளுக்கு மேல்) ரூ.500/-

III. திருமதி.எஸ்.மகாலட்சுமி (7 ஆண்டுகளுக்கு மேல்) ரூ.500/-

7. இதுவரை நமது சங்கத்தின் (Tamil Nadu Highway Engineers News) மாத இதழின் பதிப்பாளராகப் பணியாற்றி வந்த பொறிஞர் அ.வேங்கடாசலம் அவர்களும், ஆசிரியராகப் பணியாற்றி வந்த பொறிஞர் ஆர்.தீபக் அவர்களும் தற்போது சங்கப் பொறுப்புகளில் இல்லாத காரணத்தால் அந்தப் பதவிகளுக்கு தற்போது சங்கப் பொறுப்பில் உள்ள பதிப்பாளராக பொறிஞர் ப.வீரமணி அவர்களும் ஆசிரியராக பொறிஞர் சி.நடராஜன் அவர்களும் நியமிப்பதாக செயற்குழுவில் ஒருமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

8. இதுவரை (Tamil Nadu Highway Engineers News) மாத இதழை அச்சிட்டு வந்த M/s S.S.Graphics நிறுவனத்திற்குப் பதிலாக, இனி வரும் காலங்களில் VPS Printers நிறுவனத்திற்கு அந்தப் பணியினை வழங்குவதென செயற்குழுவில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

9. தலைமைப் பொறியாளர், கட்டுமானம் மற்றும் பராமரிப்பு அவர்களின் முயற்சியால் அந்த அலகில் உள்ள பொறியாளர் உறுப்பினர்கள் மாதாந்திர சந்தா செலுத்தி வருகிறார்கள். அதே போன்று மற்ற அலகில் உள்ள சங்க உறுப்பினர்கள் மாதாந்திர சந்தாவை செலுத்த வேண்டுமென வலியுறுத்துவதென செயற்குழுவில் தீர்மானிக்கப்பட்டது.

10. சங்க உறுப்பினர்களின் பங்களிப்பு உதவியுடன் கட்டடத்திற்கு தேவையான உள்கட்டமைப்பு வசதிகள் (Bed, AC & Furniture etc., ) இதற்கு தேவையான நிதிகளுக்கு கட்டிட நிதி ரூ.5000 லிருந்து ரூ.10000மாக உயர்த்தப்படுவதாக செயற்குழுவில் தீர்மானிக்கப்படுகிறது.

11. சங்கத்தில் கட்டடத்தின் பராமரிப்பு பணிக்கான கட்டணத்தை 2021க்கு பிறகு எந்தவித மாற்றமும் செய்யவில்லை. அதனால் தற்பொழுது அறைகளுக்கான பராமரிப்பு கட்டணத்தை உயர்த்தி 01.02.2026 முதல் நடைமுறைப்படுத்தப்படும் என செயற்குழுவில் தீர்மானிக்கப்படுகிறது.

12. அமைப்பின் விதிமுறைகள் (Bye Laws) பிரிவு 17ன் படி, சங்கக் கட்டிடத்தின் இரண்டாவது தளம் கட்டுவதற்கான பணியை மேற்பார்வையிட்டு கவனிப்பதற்காக ஒரு குழு நியமிக்கப்படுகிறது. இக்குழுவானது சங்கத்திற்கு எந்தவித சட்ட சிக்கலும் வராத வண்ணம் பணிகளை மேற்கொள்ள இச்செயற்குழு முழு அதிகாரம் வழங்குகிறது. இந்த குழு பின்வரும் செயற்குழு உறுப்பினர்களைக் கொண்டதாக இருக்கும்:

1. பொறிஞர் அ.கிருஷ்ணன், துணைத் தலைவர்
2. பொறிஞர் எஸ்.ஜோதிபாசு, செயலாளர்
3. பொறிஞர் ஜி.விஜயராகவன், செயலாளர்
4. பொறிஞர் எஸ்.கண்ணன், செயற்குழு உறுப்பினர்
5. முனைவர் ஆர்.செந்தில்ராஜ், செயற்குழு உறுப்பினர்
6. பொறிஞர் டி.விவேகானந்தன், செயற்குழு உறுப்பினர்

13. சங்கக் கட்டிடத்தின் இரண்டாவது தளம் கட்டுமானப் பணிக்கு ஒத்துழைப்பு வழங்கிய கட்டுமானம் மற்றும் பராமரிப்பு அலகின் தலைமைப் பொறியாளர் மற்றும் அனைத்து பொறியாளர்களுக்கு சங்கத்தின் சார்பாக மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். மேலும், இதேபோன்று ஒத்துழைப்பை தொடர்ந்து வழங்கி, கட்டடப் பணிகளை விரைவாகவும் சிறப்பாகவும் முழுமையாக முடித்து வழங்குமாறு செயற்குழு அன்புடன் கேட்டுக் கொள்கிறது.

14. நெடுஞ்சாலைத்துறையில் பணிபுரியும் பொறியாளர்கள் முதுநிலைப்படிப்பு தேர்ச்சி பெற்றமைக்கான ஊக்க ஊதிய உயர்வு வழங்க 31.03.2021 நிதித்துறை அனுமதிப் பெற்றிருக்க வேண்டும். ஆனால் இதுநாள் வரை ஊக்க ஊதியம் வழங்கப்படவில்லை. அதற்காக சங்கம் உறுப்பினர்களின் மனுக்களை பெற்று முதன்மை இயக்குநர் அவர்களிடம் அளிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக விரைவில் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென முதன்மை இயக்குநர் அவர்களை இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

15. நெடுஞ்சாலைத்துறையில் பணிபுரியும் பொறியாளர்கள் ஓய்வு பெற்றுள்ள நிலையிலும் மற்றும் ஓய்வு பெறும் நிலையில் உதவிக் கோட்டப் பொறியாளர் பதவியில் தேர்வு நிலைக்கான தகுதிகாலத்தை (10 ஆண்டுகள்) நிறைவுசெய்தும் பெற்றும் அதற்கான ஊக்க ஊதிய வழங்காமல் உள்ளது. இதனால் பொறியாளர்களின் வாழ்வாதாரம் பாதிக்கபட்டுள்ளது. இதற்கு தேர்வு நிலைக்கான ஆணையினை விரைவில் வழங்க முதன்மை இயக்குநர் அவர்களை செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

16. புதிதாக புரனமைக்கப்பட்ட அறை எண்.101 மற்றும் முதல் மாடியிலுள்ள பொது அறைக்கு அனைத்து தேவையான உபகரணங்களை வாங்கி கொள்ள கட்டட நிதியினை பயன்படுத்த

கொள்ள செயற்குழு ஒப்புதல் வழங்குகிறது.

17. பொறிஞர் எஸ்.அருணாச்சலம், தலைமைப் பொறியாளர் (பணி நிறைவு) அவர்கள் சங்க கட்டட நிதிக்காக ரூ.100000/- வழங்கினார் அவர்களுக்கு நன்றி தெரிவித்து செயற்குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

18. தமிழ்நாடு சாலை மேம்பாட்டு திட்டம் (TNRSP) அலகில் மிகப் பெரிய சாலை உட்கட்டமைப்புகளை புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி விரைவாக அமைத்து மக்கள் பயன்பெறும் வகையில் சிறப்பாக வழங்குவதை முக்கிய நோக்கமாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றது. எனவே, இவ்வலகில் புதிதாகப் பணிகளை தோற்றுவித்து பொறியாளர்களையும் பணியாளர்களையும் அதே அலகில் தொடர்ந்து பணிபுரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தமிழக அரசை செயற்குழு வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறது.

19. புதிதாக தோற்றுவிக்கப்பட்டுள்ள தமிழ்நாடு மாநில நெடுஞ்சாலைகள் ஆணையத்தில் பொறியாளர்கள் மற்றும் பணியாளர்கள் பணியிடங்களில் நெடுஞ்சாலைத்துறையில் பணிபுரியும் பொறியாளர்கள் மற்றும் பணியாளர்களை அயற்பணி மூலமாக பணியமர்த்திடுமாறு தமிழக அரசை செயற்குழு வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறது.

ஒம்/-
துணைத் தலைவர்

ஒம்/-
பொதுச் செயலாளர்

The Maintenance Charges for Highway Engineers Home has been revised due to compelling reasons. The Members are requested to continue their support

**Association of Tamil Nadu Highway Engineers**
**35v, Taluk Office Road, Saidapet, Chennai – 15**

**Revised Maintenance Charges for "Highway Engineers Home"**

| S.No. | AC / NON AC | Type of Accommodations | Maintenance charges for the Members, including members retired | | Non Members Engineers and Guests |
|---|---|---|---|---|---|
| | | | Who fully paid the Building Fund Subscription, including family Members | Who did not paid the Building Fund Subscription | |
| 1. | AC / NON AC | Room No. 02,03,101,102,104, 105,106,107,108,109,110 | 800 | 1000 | 1200 |
| 2. | Deluxe Dormitory | Room No.103 | 400 | 600 | 800 |

Note: 1.Stay can be only maximum 3 days, continuous extension can be had beyond 3days subject to availability of vacancies and with the written permission of the President / General Secretary / any other office bearer authorised for this. Purpose
2.Minimum amount of Subscription for Building Fund paid Rs.10000/-
3.These rates take with effect from 01.02.2026
4.Every 24Hrs. Or part thereof from the arrived time will be reckoned as one day to calculate the rent. But a grace time of only one hour is permitted for vacating. If it exceeds one hour, it will reckoned one day and the rent shall be paid accordingly
5.Family Members Means Wife, Husband, Children of the members

By Order of the Executive Committee,
General Secretary

**Copy to:**

©
Government of Tamil Nadu
2025

MANUSCRIPT SERIES

**FINANCE [Procurement Cell] DEPARTMENT**

**G.O.(Ms).No.262, Dated 05th December 2025**

*(karthikai-19, Thiruvalluvar Aandu 2056)*

**ABSTRACT**

**Public Procurement** — Low Value Procurement- To streamline procedure - Orders – Issued.

---

**Read the following:-**

1. G.O.(Ms).No.206, Finance (Salaries) Department, dated: 04.07.2017.
2. G.O.(Ms).No.207, Finance (Salaries) Department, dated: 04.07.2017.
3. G.O.(Ms).No.154, Finance (Salaries) Department, dated: 03.05.2018.
4. G.O.(Ms).No.63, Finance (Salaries) Department, dated: 01.03.2023.

-oOo-

**ORDER:**

Rule 33 of the Tamil Nadu Transparency in Tenders Rules 2000 prescribed the Low Value Procurement. Further, after the enactment of Tamil Nadu Transparency in Tenders Act 1998, the Rules and instructions prescribed under Article 125, Tamil Nadu Financial Code, Volume-I are restricted to Low Value Procurement of goods and services and as per the orders first read above, the Tamil Nadu Financial Code Article 125 was further amended.

**2.** Section 16(m) of Tamil Nadu Transparency in Tenders Act 1998 reads as follows:-

***Provisions of sections 9 and 10 shall not apply to procurement from the Government e-Marketplace – Special Purpose Vehicle through rate contract, on-line bidding, on-line reverse auction and any other mechanism provided by the said Government e-Marketplace – Special Purpose Vehicle, as may be notified by the Government.***

**3.** In the Government Orders second, third and fourth read above to streamline the procurement through GeM, there are, however, no consolidated instructions regarding Low Value Procurement. In order to ensure clarity in procedures and guiding the procuring entities, there is need to provide such consolidated instructions.

**4.** Based on the above, the Government, after careful consideration, decided to adopt the following consolidated orders, under Section 21 of the Tamil Nadu

P.T.O.

Transparency in Tenders Act 1998, to streamline the procedure for Low Value Procurement: -

I. For the purpose of procurement, the Tamil Nadu Transparency in Tenders Act 1998 and the Rules made and Government Orders passed thereunder shall be referred for all practical purposes including Low Value Procurement.

II. Government Orders second, third and fourth read above to streamline the procurement through Government e-Marketplace (GeM) hereby stand superseded by this Government Order.

III. While the Act exempts the Low Value Procurement from Section 9 and 10 of the Tamil Nadu Transparency in Tenders Act 1998, the procurement entity may choose to follow open tender system as per the Act.

Further, a Government department may, for the purpose of maintaining uniformity, prescribe limits lower than those prescribed in the Tamil Nadu Transparency in Tenders Act 1998 for mandatory open tender system.

IV. In case the procuring entity opts for open tender system for Low Value Procurement, such procurement shall be done only though tntenders portal ***(https://tntenders.gov.in)*** or GeM portal ***(https://gem.gov.in)***. No other online portal shall be used for such procurement through open tender system.

V. The procuring agency shall satisfy itself that,

   i. The value of the procurement, including taxes and other statutory dues, is below the prescribed low value threshold limits.

   ii. The procurement has not been split unnecessarily to bring it within the threshold limits of Low Value Procurement.

   iii. The procuring authority shall formally record the following:-

   ***" I/we am/are reasonably satisfied that the value of the procurement, including taxes and other statutory dues, is below the prescribed low value threshold limits and the procurement has not been split unnecessarily to bring it within the threshold limits of Low Value Procurement and the procedures as prescribed by the Government have been duly followed"***, before placing the procurement order.

VI. The Low Value Procurement can be done through any of the following methods,

   i. Limited Tender

   ii. Through GeM portal

VII. **Limited Tender Procedure shall be as follows:-**

i. The procuring agency shall draft detailed description or specifications of to be procured goods, service, or work with estimated cost, format for submission of quotation etc.,

ii. The procuring entity may opt for Limited Tender Option available on tntenders portal (***https://tntenders.gov.in***).

iii. Alternatively, the procuring agency shall obtain quotation in physical form in sealed covers from minimum three entities. It is hereby clarified that merely *calling for* quotations from three entities without *actually receiving* the quotations from three entities would not suffice to satisfy this condition.

iv. The procuring entity should intimate registered vendors/contractors, if any, about the proposed procurement.

v. Quotations shall be received in format prescribed by procuring entity while seeking response. Conditional offers shall not be considered for evaluation.

vi. The entity quoting the lowest price shall be selected for giving the Letter of Award. In case such entity refuses to supply upon selection of lowest quote, the procuring agency may negotiate with the entity giving the next lowest quote.

vii. The procuring entity may negotiate with the quoting entity for further reducing the quoted price.

viii. The entities from whom such quotation is asked shall be registered entities either as companies or limited liability partnerships or societies or establishments under relevant acts.

ix. The entities from whom such quotation is asked shall be in the business of relevant activity for not less than one year and shall have a turnover in any one of previous three years at least 50% of the value to be procured.

x. Quotation shall not be sought from individuals or unregistered entities. The procuring entity shall verify such credentials before evaluating the quotation.

xi. Details of such quotations received shall be entered in a separate register indicating date and time of receipt.

xii. Due care should be taken to ensure any conflict of interest between the procuring entity and the entities submitting their bid or the officials or shareholders.

xiii. In all such cases, if the product is available on GeM portal, the rates available on GeM portal should be considered for comparison purpose.

xiv. The procuring entities shall obtain and verify the basic details of quoting entities such as registration certificates, PAN, GSTN, Udhyam certificate etc.,

VIII. Low Value Procurement through Government e-Marketplace (GeM) shall be as follows:-

i. The GeM portal may be utilized for direct on-line purchase upto Rs.2,00,000/- (Rupees two lakhs only) through any of the available suppliers on the GeM, meeting the requisite quality, specifications and delivery period.

ii. The GeM portal may also be utilized for on-line procurement using online bidding process provided on GeM for low value procurements upto Low Value Procurement limits through supplier having lowest price, meeting the requisite quality, specification and delivery period after mandatorily obtaining bids.

iii. While providing specifications, the procuring entity shall ensure that there are at least three registered suppliers on the GeM portal. If the available suppliers are less than three, the procurement shall be done through tntenders portal (*https://tntenders.gov.in*).

iv. The specifications should be such that it should be commonly available as far as possible.

IX. In case of procurement from Startups from Tamil Nadu the procurement procedure shall be similar as stated above with the following modifications: -

i. The Low Value Procurement Limit will be fifty lakh in case of goods, if procuring entity decides to involve in the procurement Startups from Tamil Nadu manufacturing such goods.

ii. In such cases, the procuring entity may decide to obtain quotes only from Startups or from Startups and other entities.

iii. In case of Startups there shall be no minimum criteria either for years of existence or turnover.

iv. In case where the procuring entity obtains quotes from Startups and other entities (i.e. not exclusively from Startups) and an entity other than Startup becomes the L1, the next lowest quoting Startup shall be given the opportunity to match the price quoted by the L1. In case the price is matched by the said Startup, up to 50% work order can be given to the said Startup.

5. Necessary amendment to Tamil Nadu Financial Code Volume-I will be issued separately.

**(BY ORDER OF THE GOVERNOR)**


**T.UDHAYACHANDRAN**
**PRINCIPAL SECRETARY TO GOVERNMENT.**

**To**
All Secretaries to Government.
The Secretary, Legislative Assembly, Secretariat, Chennai-9.
The Comptroller, Governor's Household, Raj Bhavan, Chennai-32.
The Governor's Secretariat, Raj Bhavan, Guindy, Chennai-32.
All Heads of Department.
All Collectors / All District Judges /All Chief Judicial Magistrates.
All Departments of Secretariat.
The Principal Accountant General(A&E), Chennai-18
The Accountant General (Audit-1), Chennai-18.
The Accountant General (Audit-II), Chennai-18.
The Accountant General (CAB), Chennai-9.
The Director of Treasuries and Accounts, Chennai-35.
All Pay and Accounts Officers/All Treasury Officers.
The Chairman, Tamil Nadu Public Service Commission, Chennai-3.
The Registrar, High Court, Chennai-600 104.
The Registrars of all Universities.
All Public Sector Undertakings and Statutory Boards.
The Commissioner, Greater Chennai Corporation.
The Commissioner of All Corporations.
All Local Bodies

**Copy to:**
The Finance Secretary, Government of India, Ministry of Finance, o/o Department of Economic Affairs, New Delhi-110 011.
The Commerce Secretary, Government of India, o/o Ministry of Commerce and Industry, New Delhi-110 011.
The Senior Principal Private Secretary to the Principal Secretary to Government, Finance Department, Chennai-9.
The Senior Private Secretary to the Secretary (Expenditure) to Government, Finance Department, Chennai-9.
All Officers / All Sections in Finance Department, Chennai-9.
Stock File / Spare Copies.

**// Forwarded : By Order//**

05/12/25
**SECTION OFFICER**



# இரங்கல் செய்தி

தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை பொறியாளர் சங்கத்தின் பொருளாளராக நேர்மையுடனும் உண்மையுடனும் முழு ஈடுபாட்டுடன் பணியாற்றிய **பொறிஞர் அ. பாலசுப்பிரமணியம்** அவர்கள் இறைவனடி சேர்ந்தார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.


பொறிஞர் ந. சுப்ரமணியன் அவர்கள் தலைவராக இருந்த காலகட்டத்தில், சங்கத்தின் பொருளாளராக பொறுப்பு வகித்த அவர், திட்டம் வடிவமைப்பு மற்றும் ஆய்வு அலகின் தலைமைப் பொறியாளர் அலுவலகத்தில் பணியாற்றியபோது, நமது சங்கக் கட்டிட பணிகளுக்காக ஒவ்வொரு உறுப்பினரிடமிருந்தும் ரூ.50, ரூ.100 எனச் சேகரித்து, சங்கக் கட்டடத்தை உருவாக்க அரும்பாடுபட்டார்.

சங்கக் கட்டிடப் பணிகள் நடைபெற்ற காலத்தில், கட்டுமான பணிகள் தரமாகவும் நேர்த்தியாகவும் நடைபெற அவர் நேரடியாக முன்னின்று செயல்பட்டார். எந்தவித தனிப்பட்ட எதிர்பார்ப்புமின்றி அவர் ஆற்றிய அர்ப்பணிப்பும், அவரது நேர்மையும் தான் இன்று செயல்பாட்டில் இருக்கும் சங்கக் கட்டடத்தின் உறுதியான அடித்தளமாக அமைந்துள்ளது.

பின்னர் துறையினால் பணிமாறுதல் செய்யப்பட்டதையடுத்து, பொறிஞர் செ.பன்னீர்செல்வம் அவர்கள் பொருளாளராகப் பொறுப்பேற்று, சங்கக் கட்டிட பணிகளைத் தொடர்ந்து நிறைவேற்றினார்.

பொறிஞர் அ.பாலசுப்பிரமணியம் அவர்கள் போன்ற உயரிய பண்புகளும் அர்ப்பணிப்பும் கொண்ட நல்லவர்களின் வழியில், நமது சங்கத்தை வழிநடத்த உறுதியேற்போம்.


அவரை இழந்து வாடும் குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் நமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.




# கம்போடியா (கம் ஓடியா) நாட்டின் காட்சி

(பதிவு 2)

பொறிஞர் ப.நரசிம்மன், எம்.இ.,
உதவிக் கோட்டப் பொறியாளர்
சென்னை - கன்னியாகுமரி தொழிற்தட திட்டம்
அரக்கோணம்





பயண ஏற்பாட்டின் போது, திட்டமிட்டப்படி மாலை ஆறுமணியில் இருந்து, ஒவ்வொருவராக சென்னை அறிஞர் அண்ணா பன்னாட்டு விமான நிலையம் வந்து சேர்ந்தோம்.

விமான நிலையம் எப்போதும் பரபரப்பாக இருக்கக்கூடிய இடமாகும். அதிலும், சென்னை பன்னாட்டு விமான நிலையம், மிகவும் பரபரப்பாக இருப்பதுடன், சுறுசுறுப்பாகவும், இயங்கிக் கொண்டிருக்க கூடிய விமான நிலையமாகும்.

உள்நாட்டு விமான பயணம் எனில் விமானம் புறப்படும் நேரத்திற்கு, இரண்டு மணி நேரம் முன்னதாக, விமான நிலையத்தில் நாம் இருக்க வேண்டும்.

அதேபோல, வெளிநாட்டு விமானப் பயணம் மேற்கொள்ளும்போது, குறைந்தபட்சம் 3 மணி நேரம் முன்னதாக இருக்க வேண்டும்.

எங்கள் குழுவினர் திருச்சியில் இருந்து வந்த நந்தவனம் சந்திரசேகர் அவர்கள் வழிகாட்டுதல் படி ஏழு மணிக்கு ஒன்று சேர்ந்தோம் .

விமான நிலையத்தில், முதல் சோதனையில், பயணச்சீட்டை காண்பித்து கடவுச்சீட்டு சரிபார்க்கப்பட்டு பயணம் மேற்கொள்ள இருக்கும் விமான நிறுவன கவுண்டரை நோக்கி முன்னேறிக்கொண்டிருந்த வரிசையில் நின்றோம்.

அந்த வரிசை சங்கிலித் தொடர் போல், முன்னும் பினனும் நீண்டு கொண்டிருந்தது. வளைந்தும், நெளிந்தும், முன்னோக்கி சென்று கொண்டு விமான பயண சீட்டு வாங்கும் இடத்தை அடைந்தோம்.

அங்கு நமது பெட்டிகளின் எடை சரிபார்க்கப்பட்டு அதற்கான அட்டை ஒட்டப்பட்டு, விமானத்திற்கு, தானியங்கி இயந்திர பெல்ட் மூலம் எடுத்துச் செல்லப்பட்டது.

கையில் எடுத்துச் செல்லும், சிறிய அளவிலான பைகள் நம்முடனே வைத்துக்கொள்ள அறிவுறுத்தப்பட்டது. நாம் எடுத்துச் சென்ற பெட்டிகளின் எடை அளவு குறிப்பிட்ட எடை பார்க்கப்பட்டு அளவுக்குள் இருக்கிறதா?, அதைவிட அதிகமான எடையுள்ள பொருட்கள் வைக்கப்பட்டுள்ளதா?, என்பதை உறுதிப்படுத்திக் கொண்டு, நமக்கான பயணச்சீட்டு வழங்கப்படுகிறது.

குழுவாக செல்லும்போது, ஒருவர் அதிகமான எடையுள்ள பொருட்களை எடுத்து வந்தாலும், வேறொருவர் குறைவான எடையுள்ள பெட்டியை கொண்டு வரும் நிலையில், அதிக கட்டணம் செலுத்த வேண்டிய நிலை ஏற்படுவதில்லை.

பயணச்சீட்டை பெற்றவுடன், உடன் இருக்கும் விமான நிறுவனதந்தைப் சார்ந்த அலுவலர்கள், அடுத்து நாம் செல்ல வேண்டிய, இம்மிகிரேஷன் எனும் குடியேற்றம் பகுதிக்கு வழிகாட்டுகிறார்கள்.



அங்கு பணியில் இருக்கும் இந்திய அரசின் சுங்க அலுவலர்கள், நமக்கான பயண சீட்டு, நாம் எந்த நாட்டிற்கு செல்கிறோம், அங்கு நமக்கு தங்குவதற்கான அனுமதி, பயணம் மேற்கொள்வதற்கான அனுமதி, பயணம் முடித்து திரும்பி வருவதற்கு போதுமான பொருளாதாரச் சூழல், போன்ற அனைத்தையும் சரிபார்த்த பிறகு, நம் கடவுச்சீட்டில் அடையாள முத்திரை இடப்படுகிறது.

பின்னர்,இந்தியாவிலிருந்து இந்த நாட்டிற்கு புறப்பட்டு இருக்கிறார் என்ற தகவல் கூடிய வில்லையை கடவுச்சீட்டில் ஒட்டப்படுகிறது.

அதனை தொடர்ந்து, அடுத்தக்கட்ட பரிசோதனைக்கு அனுப்பப்படுகிறோம். இந்தப் பரிசோதனையின்போது, நம் கையில் எடுத்து வந்த பை, பெல்ட், ஷூ, செல்போன் சார்ஜர், எலக்ட்ரானிக் பொருட்கள் என அனைத்து உடைமைகளையும்,முழுமையான பரிசோதனைக்கு உள்ளாக்கப்படுகிறோம்.

இந்த சோதனையின்போது ஏதேனும் சந்தேகம் ஏற்படும் போது, நம் உடமைகள் திரும்ப பரிசோதிக்கப்பட வேண்டிய சூழல் ஏற்படுகிறது.

பாதுகாப்பு குழுவின், அனைத்து விதமான பரிசோதனைகளும் முடிக்கப்பட்டு, தொடர்ந்து முன்னேறும் போது, நமது பயணம் ஆரம்பமாகிறது.

ஆனால் இந்த நிகழ்வுகள் நடந்து முடிப்பதற்கு ஏறக்குறைய இரண்டு மணி நேரத்திற்கு மேல் ஆகி விடுகிறது. ஆனால், நமக்கான நேரம் நமக்கு தெரியாமல் கரைந்து போவதை கடிகார முட்கள் காட்டி கொடுத்து விடுகின்றன.

எப்படி நேரம் போனது, என்பது நமக்கே தெரியாமல், நம்மை நாமே கேள்வி கேட்டுக்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டு விடுகிறது.

அனைத்து நிலைகளையும் கடந்து, நமது பயண சீட்டில் குறிப்பிட்டுள்ள, நாம் பயணிக்க இருக்கும் விமானம், புறப்பட இருக்கும் கதவு என்னை அறிந்து கொண்டு, அந்த இடத்தை நோக்கி நடக்கும் போது, அனைத்து விதமான வணிக நிறுவனங்களின் கடைகளும், நம் வரவை எதிர்நோக்கி காத்து கொண்டு இருக்கின்றன.

விமான பயணம் எல்லோராலும் மேற்கொள்ள முடியாத பயணமாகும். கடந்த 10 ஆண்டுகளில், பல்வேறு தொழில் நுட்ப வளர்ச்சியின் காரணமாக புதிதுபுதிதாக பல்வேறு விமான நிறுவனங்கள் உருவாகி இருக்கிறது.

இதன் பொருட்டு சாமானிய மனிதனும் விமான பயணத்தை மேற்கொள்ளும் அளவிற்கு இன்றைய நிலைமை மாறி இருக்கிறது.

இருந்தபோதிலும், அதற்கான விலை சற்று அதிகம் என்பதை மனதில் கொள்ள வேண்டும்.

விமான பயணம், விலை உயர்ந்ததாக உள்ளதால் தானோ என்னமோ, விமான நிலைய வளாகத்தில் உள்ள வியாபார நிறுவனங்களும், அங்கு விற்பனை செய்யும் பொருட்களின் விலையை அதிகமாக விற்கப்படுகிறதோ என்று என்ன தோன்றுகிறது.

ஒரு தேநீர் அல்லது காபி குடிக்க வேண்டும் என்றால் ரூபாய் 300 முதல் 500 ரூபாய் வரை செலவழிக்க வேண்டும். இரண்டு இட்லியை ரூபாய் 500 விலைக்கு மகிழ்ச்சி பெருக்குடன் சாப்பிட வேண்டும்.

அடிப்படைத் தேவைக்கான பொருட்களை விலை அதிகமாக இருப்பினும் அவற்றினை நம்மால் வாங்காமலும் இருக்க முடியாது.

அதற்காக, நாம் அதிகபட்ச விலையை கொடுப்பதற்கு தயங்கக் கூடாது. இதுதான் விமான பயணத்தின் போது உணர்ந்து கொள்ள வேண்டிய உன்னத செய்தியாகும்.

விதவிதமான வணிக வளாகம், வெவ்வேறு நிறுவனங்கள், விதவிதமான பொருட்களை, கலைநயம் மிக்க பொருட்களை, கண்ணை கவரும் வகையில், காட்சிப்படுத்தி இருக்கிறார்கள்.

எல்லோரும் எல்லா பொருட்களையும் வாங்கப் போவதில்லை என்றாலும், வேண்டிய பொருளை, அதன் விலையை ஒரு பொருட்டாக பார்க்காமல், வாங்க வேண்டியவர்கள் வாங்கிச் செல்கிறார்கள்.

நம்மோடு பயணம் செய்தவர்கள், இரவு நேர சிற்றுண்டிக்காக இட்லியை பொடியுடன் சேர்த்து எடுத்து வந்திருந்தார்கள். அதனைப் பகிர்ந்து கொண்டோம். பசியாறினோம் .

இரவு 7 மணிக்கு ஒன்று சேர்ந்து விமான நிலையத்தில் உள் நுழைந்தோம். விமானம் புறப்பட இருக்கும் கதவு எண்ணில் வந்து அமரும்போது, இரவு மணி 9:30 மணி ஆகிவிட்டது என்று ஆங்காங்கே தென்பட்ட கடிகாரங்கள் தெரிவித்தன.

விமானம் புறப்படும் நேரம் நள்ளிரவு 11:30 என்பதால், கூடுதல் நேரம் இருப்பதை கருத்தில் கொண்டு, கைபேசிக்கு சார்ஜ் போடுபவர்கள் சார்ஜ் போட்டார்கள்.

அருகில் உள்ள கடைகளுக்கு சென்று பொருட்களை வாங்குபவர்கள் வாங்க சென்றார்கள். நானும் லான்ச் எனும் உணவு அருந்தி ஓய்வெடுக்கும் அறைக்கு செல்ல நண்பரை அழைத்துச் சென்றேன்.

ஆயிரக்கணக்கில் கட்டணம் செலுத்தி செல்ல வேண்டிய அந்த அறைக்கு, நாம் அன்றாடம் பயன்படுத்தும்,நம் வங்கியின் டெபிட் கார்டு மூலம் , சில சொற்ப அளவிலான தொகையில், அந்த அறையை பயன்படுத்தலாம், அங்கு உணவு அருந்தலாம், என்ற செய்தியை நண்பருக்கு சொன்னபோது, அவரால் நம்ப முடியவில்லை.

அவர் மட்டுமல்ல, உடன் வந்திருந்த வேறு சிலருக்கும், இந்த தகவலை பகிர்ந்த போது, நம்ப முடியாமல் என்னை பார்த்தது வியப்பாக பார்த்ததை பார்க்க முடிந்தது.

சென்னை உள்ளிட்ட இந்தியாவில் இருக்கும், பெரிய விமான நிலையங்களில் உள்ள லான்சுகளில் நம் வங்கியின் டெபிட் கார்டு மூலம் உணவருந்தி பயன்பெறலாம் என்ற தகவல் பலருக்கு புதியதாக இருந்த போதிலும், இதன் மூலம், பெரும் அளவிலானோர் உணவு அருந்தி ஓய்வெடுத்து தங்கள் பயணத்தை மேற்கொண்டு வருகிறார்கள்.

விமான நிலையத்தில் நாம் எங்கு இருந்தாலும், விமானங்களின் புறப்பாடு, வருகை ஆகிவற்றின் தகவல் ஆங்காங்கே இருக்கும், தகவல் பலகைகள் மூலம், நமக்கு தகவல் கொடுத்துக் கொண்டே இருக்கின்றன.

நமக்கான விமானத்தில் பயணிப்பதற்கான இடத்தின் கதவு எப்போது திறக்கும் என்பதையும் இந்த தகவல் பலகைகள் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

தொடர்ந்து விமானத்தின் புறப்பாடு மற்றும் அதற்கான அறிக்கை ஒலிபெருக்கி மூலம் கொடுக்கப் படுகிறது.

பன்னாட்டு விமானங்கள் நீளமாகவும், அளவில் பெரியதாகவும் இருப்பதனால், விமானியின் இருக்கை அருகே உள்ள பகுதிகள் ஒரு ஜோனாகவும், நடுப்பகுதி ஒரு ஜோனாகவும், விமானத்தின் கடைசி பகுதி ஒரு ஜோனாகவும், வகைப்பாடு செய்யப்பட்டு இருக்கிறது.

அதன் அடிப்படையில்,முதலில், கடைசி ஜோனில் பயணியர்களை உள்ளே அனுமதிக்கிறார்கள். அதற்கும் முன்னதாக, வியாபார இருக்கை எனும் அதிக தொகை கொடுத்து பயணிப்பவர்களுக்கு முன்னுரிமை அளிக்கிறார்கள்.

அதனை அடுத்து, வயதில் முதிர்ந்தவர்கள் உதவி தேவைப்படுபவர்களை விமானத்திற்கு அழைக்கிறார்கள். அதன் பிறகு விமான பகுதியின் பின்பகுதியில் பயணம் செய்ய இருப்பவர்கள் அனுமதிக்கப்படுகிறார்கள்.

பிறகு நடுப்பகுதியில் பயணம் செய்ய இருப்பவர்கள் அமர இருப்பவர்கள் அழைக்கிறார்கள். கடைசியாக விமானத்தின் முன் பகுதியில் பயணம் செய்ய இருப்பவர்கள் அமரக்கூடிய வகையில் ஒழுங்குப்படுத்தி, அனைவரையும் அமர வைக்கிறார்கள்.

ஒன்று இரண்டு மூன்று, என்ற தொடரில் வரிசையாக எண்கள் கொடுக்கப்பட்டு, அதில் ஒன்று என்பதில், இடது புறம் மூன்று இருக்கைகள் , வலது புறம் மூன்று இருக்கைகள் அமையப் பெற்றுள்ளது.

இந்த அமைப்பிர் அடிப்படையில் நம் பயணச்சீட்டைப் பார்த்து குறிப்பிட்ட இடத்தில், அமர்ந்து கொள்ள வேண்டும்.

விமான பணி பெண்கள், அதற்கு அனைவரும் அமரவும், அவர்களின் உடமைகள் வைப்பது உள்ளிட்ட அனைத்து வகையான உதவுகிறார்கள்.

அனைவரும் அவரவர்களுக்கான இடத்தில் அமர்ந்து கொண்டிருக்கும் போதே, விமானி தன் பணையை தொடங்குகிறார்.

விமானப்பணி பெண்களும் பாதுகாப்பு குறித்த அவர்களுக்கான, அறிக்கைகளை பயணிகளுக்கு கொடுத்துக் கொண்டே இருக்கிறார்கள்.

விமானம் புறப்படுவதற்கு எதுவாக, விமானி கடைசி உத்தரவாக, விமான பணி பெண்களுக்கு தகவல் தெரிவிக்கிறார்.

அதனைத் தொடர்ந்து விமானத்தின் அனைத்து கதவுகளும் மூடப்படுகிறது. விமான பயணத்தின் போது, அவசரகால கதவு திறப்பது மற்றும் அவசர சூழல் வந்தால், எப்படி நம்மை காப்பாற்றிக் கொள்வது போன்ற செய்திகளை, தகவல்கள், ஆங்கிலம் இந்தி மற்றும் வேறு ஒரு மொழிகளிலும், தொடர்ந்து சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த நிகழ்வு நடந்து கொண்டிருக்கும் போதே, விமானம் பின்னோக்கி நகர்த்தப்படுகிறது. வேறு ஒரு இயந்திரம் மூலம், சற்று தூரம் பின்னோக்கி இழுக்கப் படுகிறது .

விமானி, விமானத்தினை தனது இயக்கம் மூலம், லாவகமாக வளைத்து, பேருந்தை போல, விமான ஒடுதளத்தில், முன்னோக்கி ஒட்டி செல்கிறார்.

விமான ஒடுதளத்தில் முன்னோக்கி கிலோமீட்டர் கணக்காக, செல்லும் பயணத்தின் போது, நாம் வானில் பறக்க தானே விமானத்தில் ஏறினோம், ஆனால், விமானம் ஒடுதளத்தில் பேருந்தை போல ஒடிக் கொண்டிருக்கிறதே, என்று என்னத் தோன்றுகிறது.

விமானம், ஒடுதளத்தில் சென்று கொண்டிருக்கும் போது, அருகாமையில், பக்கவாட்டில் நிறுத்தப்பட்டு இருக்கும் வேறு வேறு நாட்டு விமானங்கள், வேறு வேறு நிறுவன விமானங்கள், சிறியதும் பெரியதுமான வெவ்வேறு அளவுகளில், நீளங்கள் மற்றும் உயரம் கொண்ட அமைப்பில் நிறுத்தப்பட்டு இருப்பதை பார்க்க முடிகிறது.

நமது விமானம் ஒடுதளத்தில் முன்னோக்கி சென்று கொண்டிருக்கும் போது, எதிர் திசையில் தரையிறங்கும் விமானம் வேறு ஒரு, ஒடு தளத்தில் தரை இறங்கியவுடன் , அதுவும் பேருந்து போல தடதடவென அதன் நிறுத்தமிடம் நோக்கி சென்று கொண்டிருப்பதை பார்க்க முடிகிறது.

நம்முடைய விமானம், பேருந்தைப் போல ஒடிக் கொண்டிருந்த விமானம், சிறிது நேர இடைவெளியில் தனக்கான இடத்தில் போய் சிறிது நேரம் நிற்கிறது.

விமானி விமான கட்டுப்பாட்டு அனுமதியை வேண்டி, விமானத்தை நிறுத்தி, விமான இன்ஜினை முழு வேகத்தில் இயக்குவதை அறிய முடிகிறது.

கடைசியாக, அவர் டேக் ஆ/ப் எனக் கூறி, திடீரென வேகம் பிடித்து, வானில் பறப்பதை பார்க்க முடிகிறது. விமானம் ஜிவ் எனும் காற்றின் ஒசையுடன் விமானத்தின் வேகத்தை அதிகப் படுத்துகிறார்.

(தொடர்ந்து பயணிப்போம்...)

செய்தி வெளியீடு எண்: 3101 நாள்: 30.12.2025

**சென்னை, கிண்டி, நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் உள்ள கூட்டரங்கில், மாண்புமிகு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்.**

நெடுஞ்சாலைத்துறையின் செயல்பாடுகள் குறித்து, இன்று (30.12.2025) சென்னை, கிண்டி, நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் உள்ள கூட்டரங்கில், மாண்புமிகு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் அனைத்து தலைமைப் பொறியாளர்கள், கண்காணிப்புப் பொறியாளர்கள், கோட்டப் பொறியாளர்கள் பங்கு பெற்றனர்.

ஆய்வுக் கூட்டத்தை தொடங்கி வைத்து அமைச்சர் அவர்கள், இதுவரை மேற்கொண்டப் பணிகள் குறித்தும், நிதி ஒதுக்கீடு செலவின விவரங்கள் குறித்து ஆய்வு மேற்கொண்டு, தக்க அறிவுரைகள் வழங்கினார்கள்.

சாலைப் பழுதுகள், அதாவது சாலையில் ஏற்பட்ட நொடிகள், பேட்ச் ஒர்க் செய்து நல்ல முறையில் பராமரிக்க வேண்டும் என்றும், சாலை ஓரங்களில் உள்ள முட்புதர்களை அகற்ற வேண்டும் என்றும் மலைப் பிரதேசங்களில் சாலை ஓரங்களில் உள்ள முட்புதர்களை அகற்ற வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்கள்.

சாலைப் புருவங்கள் தார் சாலையின் மட்டத்தைவிட உயரமாக உள்ளதால் மழைநீர் வடிய இயலாத நிலை உள்ளது. மழைநீர் வடிய ஏதுவாக சாலை புருவங்களை சீரமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள்.

Page | 1

கிலோ மீட்டர் கற்கள் மற்றும் பர்லாங் கற்கள் இல்லாத இடங்களை கண்டறிந்து அந்த இடங்களில் கற்களைவ நடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்தப் பணிகளை எல்லாம் ஆய்வு செய்ய நியமனம் செய்யப்பட்டுள்ள கண்காணிப்பு அலுவலர்கள் உடனடியாக ஆய்வு செய்து அறிக்கை அனுப்ப வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தொடக்க உரையை தொடர்ந்து நெடுஞ்சாலைத்துறையின் செயல்பாடுகளை ஒவ்வொன்றாக ஆய்வு செய்தார்.


இந்த இந்த ஆய்வுக் கூட்டத்தில், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அரசுச் செயலாளர் டாக்டர் இரா.செல்வராஜ், இ.ஆ.ப., நெடுஞ்சாலைத்துறை திட்ட இயக்குநர் திரு.தெ.பாஸ்கர பாண்டியன், இ.ஆ.ப., தலைமைப் பொறியாளர் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) திரு.கு.கோ.சத்தியபிரகாஷ், சிறப்பு அலுவலர் (தொழில்நுட்பம்) திரு.இரா.சந்திரசேகர், முதன்மை இயக்குநர் திரு.இரா.செல்லதுரை, தரக்கட்டுப்பாடு இயக்குநர் திரு.எம்.சரவணன், கண்காணிப்புப் பொறியாளர்கள், கோட்ட பொறியாளர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**********

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9

**நமது சங்கத்தின் புத்தாண்டு கலந்துரையாடல் மற்றும் நாட்குறிப்பேடு விழா 28.12.2025 அன்று சென்னையில் நடைபெற்றது. விழாவில் சமீபத்தில் உதவிக் கோட்டப் பொறியாளராகப் பதவி உயர்வு பெற்ற பொறியாளர்களுக்கு சங்கத்தின் மாநில நிருவாகிகள் பொன்னாடை அணிவித்து சிறப்பித்தனர்**

பொருளாளர் பொறிஞர் சொ.தியாகராஜா,
உதவிக் கோட்டப் பொறியாளர்,
நபார்டு மற்றும் கிராமச் சாலைகள்,
மன்னார்குடி







செயற்குழு உறுப்பினர்
பொறிஞர் நெ.ஜாஹீர் உசேன்,
உதவிக் கோட்டப் பொறியாளர்,
கட்டுமானம் மற்றும் பராமரிப்பு,
முதுகுளத்தூர்

பொறிஞர் ப.நரசிம்மன்,
உதவிக் கோட்டப் பொறியாளர்,
சென்னை-கன்னியாகுமரி
தொழிற்தடத் திட்டம், அரக்கோணம்



துணைத் தலைவர் பொறிஞர் அ.கிருஷ்ணன்,
உதவிக் கோட்டப் பொறியாளர்,
கட்டுமானம் மற்றும் பராமரிப்பு,
வானூர்

பொறிஞர் எம்.கே.சரவணன்,
உதவிக் கோட்டப் பொறியாளர்,
கட்டுமானம் மற்றும் பராமரிப்பு,
கும்மிடிப்பூண்டி



RNI No. 49572/90

Registration No. TN/CC (S) DN/597/23-25
Licensed to post without prepayment under WPP No.TN/PMG/(CCR)WPP146 / 23 – 25
Date of Publication: First Week of Every Month
Posted at PathrikaChennel, Egmore, Chennai - 600 008
Posted between 7th - 13th Everymonth
Despatch Date : 17.01.2026




உதவிக் கோட்டப் பொறியாளராகப் பதவி உயர்வு பெற்ற பொறியாளர்களின் சார்பாக சங்கத்திற்கு நிதி அளிக்கப்பட்டது



நமது சங்கத்தின் புத்தாண்டு கலந்துரையாடல் மற்றும் நாட்குறிப்பேடு விழா 28.12.2025 அன்று சென்னையில் நடைபெற்றது.

Published by: Er.A.Venkatachalam, M.E., Former President, ATNHE, on behalf of the Association of Tamilnadu Highways Engineers; 35V, Taluk Office Road, Saidapet, Chennai-600 015
Printed by: S.S.Graphics, 54/2, Mohammed Hussain Street, Royapettah, Chennai-600 014
Editor: Er.R.Deepak, M.E., Former General Secretary, ATNHE